Registered as a Newspaper

பெண்மணிகளுக்கும்
சிறுவர் சிறுமியருக்கும்
ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
நவீன
புடவை துணுசுகளுக்கும்
றெடிமேட்
ஆடைகளுக்கும்
புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னாகம்.

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 2-50

குறுகிய காலத்தில்
மக்களின்
நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னாகம்.

மலர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி புரட்டாதி மீ 03 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 முஹறம் பிறை 24 (19-09-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY கிகரம்: 37

வடமராட்சியில் மக்கள் கொதிப்பு

பொலீஸ் நிலையங்கள் மீது தாக்கு

வழிமறிப்பு செய்தோரை ராணுவம் துன்புறுத்தியது

— வடமராட்சி, பருத்தித்துறைச் செய்தியாளர்கள் —

வடமராட்சி, செப்டெம்பர் 19

வடமராட்சிப் பகுதியில் மக்கள் கொதிப்படைந்தவர்களாக, பொலீஸ் நிலையங்களைத் தாக்கினர். அங்கிருந்த வாகனங்களைத் தீ வைத்துக் கொளுத்தினர்.

இதே வேளை வல்வெட்டித்துறையில் வழிமறிப்புப் போராட்டம் செய்த பெண்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கால்களால் உதைத்தும், துப்பாக்கியால் இடித்தும் துன்புறுத்தினர்.

இச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்றன.

பருத்தித்துறை, புலோலி பொலீஸ் நிலையங்கள், உணர்ச்சிவசப்பட்ட மக்களால் நேற்று முற்றுச் சேதமாக்கப்பட்டன. புலோலி பொலீஸ் நிலையத்துக்குச் சொந்தமான ஜீப் வீதிக்கு இழுத்து வரப்பட்டு தீயிடப்பட்டது.

நேற்றுக்காலை 9-00 மணியளவில் பொதுமக்கள் மறியல் போராட்டம் செய்து கொண்டிருந்த போது ஒரு பகுதி பொதுமக்கள் ஆவேசம் கொண்டவர்களாக புலோலி, பருத்தித்துறை பொலீஸ் நிலையங்களை உடைத்து உள்ளே புகுந்தார்கள்.

இதனையடுத்து பொலீஸார் சில ஆவணங்களுடன் பின்புறத்தால் ஓடினார்கள். சில பொதுமக்கள் துரத்திப் பிடித்து ஆவணங்களைப் பறித்து நெருப்பிலிட்டார்கள்.

பொலீஸ் நிலையத்தினுள் புகுந்த பொதுமக்கள் முறைப்பாட்டுப் புத்தகங்கள், பொலீஸ் நிலைய தஸ்தாவேஜுக்கள் போன்ற ஆவணங்களை எடுத்து வெளியே வீதியில் வீசினார்கள்.

இறுதியாக புலோலி பொலீஸ் நிலையத்திலிருந்த ஜீப் வண்டியை வெளியே தள்ளி பருத்தித்துறை - சாவகச்சேரி வீதியில் விட்டு அங்கிருந்த பொலீஸாரால் பாவிக்கப்பட்ட ஏழு துவிச்சக்கரவண்டிகளையும் ஆவணங்களையும் வீதியில் இட்டு தீயிட்டார்கள்.

புலோலி பொலீஸ் நிலையம் இருந்த கட்டடச் சொந்தக்காரர் திருவேல்முருகு ஜெயதேவனின் உறவினர் ஓருவரின் வேண்டுகோளுக்கிணங்க வீட்டிற்கு எவ்வித சேதமும் ஏற்படுத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)



திலீபன் நேற்று மக்களுக்கு உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படத்தையும் அவர் உரையைக் கேட்டு மக்கள் அழுதுகொண்டு இருப்பதை மற்றைய படத்திலும் காணலாம். (படம் — ஜெயம்)

பூரண ஸ்தம்பிதம்

பருத்தித்துறை, செப் 19

பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி ஆகிய பகுதிகளில் நேற்றுப் பூரண ஹர்த்தாலும், வழிமறிப்புப் போராட்டமும் நடைபெற்றன.

இப்பகுதியிலுள்ள சகல கடைகளும் பூட்டப்பட்டதுடன், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை.

வர்த்தக நிலையங்கள் இன்று மூடியிருக்கும்

யாழ்ப்பாணம், செப். 19

இன்று முழு நாளும் கடைகளைப் பூட்டி, தொடர்ந்துநடைபெற்று வரும்போராட்டத்துக்கு ஆதரவுதரும்படி வர்த்தகர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

இதற்கிடையே தனியார் போக்குவரத்துச் சேவைகளும் இன்று நடைபெறுது எனத் தெரிவிக்கப்படுகிறது

அரச பஸ்கள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை நடத்தும் என்றும்—

ரயில் சேவையும் முற்றாக நிறுத்தப்படுமென்றும் தெரியவருகின்றது.

தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் வழமை போல் தொடர்ந்து நடைபெறும். (உ-10)

ஈரோஸ் உறுப்பினர்கள் கடத்தல்

யாழ்ப்பாணம், செப். 19

ஈரோஸ் உறுப்பினர்கள் நான்கு பேர் கடந்த ஆறும் திகதிஆயுதம்தாங்கியோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்,

வன்னிப் பிராந்தியத்தில் கடத்தப்பட்டதமாக தோழர்கள் விஜி, மகிந்தர் வரன், ஹரன் ஆகியோர் எங்கே என்று கேள்வி எழுப்பி ஈரோஸ் இயக்கத்தினர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர் (உ-10)

மூவர் பலி!

கொழும்பு, செப். 19

தென் இலங்கை நகரில் நேற்று துப்பாக்கி தாங்கிய இனந்தெரியாத நபர் ஒருவர் சுட்டதில் ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூர்த் தலைவர்கள் மூவர் உயிரிழந்தனர். (உ-எ)

திலீபனின் நிலை மேலும் மோசம்

யாழ்ப்பாணம், செப் 19

திலீபனின் உடல்நிலை நான்காவது நாளான நேற்று மிகவும் மோசமான நிலையில் சோர்ந்து காணப்பட்டது.

நாடித்துடிப்பும் மிக மிகக் குறைந்து காணப்பட்டது.

அவர் நேற்று 24 மணி நேரத்துக்கு மேலாக சிறு நீர்கழிக்கவில்லை.

அவரின் உதடுகள் கூட நீராகாரம் இன்றி வெடித்துக் காணப்படுகின்றன.

அவரது உடல் நிலை நினைவு வருவதும், போவதுமான நிலையை அடைந்துள்ளது

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் திலீபனை நேற்று மாலையில் வந்து பார்த்தார்.

இதேவேளை திலீபனின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்தும் - விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக்கோரிக்கையை முன்வைத்தும்இரு பெண்கள் உட்பட பல பொதுமக்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். (உ-10)

மிகுதி ஆயுதங்களை கேட்டு இந்திய அதிகாரி வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 19

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் திலீபனின் உடல் நிலை மோசமடைந்திருக்கும் இவ்வேளையில் இந்திய இராணுவ அதிகாரிகள் புலிகளிடம் அது பற்றி எதுவும் கதைக்காமல் எஞ்சியுள்ள ஆயுதங்களை ஒப்படைக்குமாறும் சிங்கள சிப்பாய்களை விடுதலை செய்யுமாறும் கோரிக்கை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று விடுதலைப் புலிகளின் தலைமையகத்துக்கு விஜயம் செய்த மேஜர் பெர்ணாண்டஸ் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயாவிடம் இந்த கோரிக்கையை விடுத்தார்.

எனினும் நேற்று நான்காவது நாளாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் திலீபனின் உடல் நிலை பற்றியோ, அல்லது அதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் ஐந்து அம்சக் கோரிக்கைகள் பற்றியோ எதுவும் அவர் கூறவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியப் படையை மக்கள் தடுத்தனர்

வடமாராட்சி, செப். 19

வல்வைச் சந்தியில் மறியலில் ஈடுபட்டிருந்தவர்கள் தமது தடையைத் தாண்டி இந்திய ராணுவத்தினர் செல்ல முடியாதவாறு வழி மறித்தனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலையில் நடைபெற்றது.

சம்பவம் குறித்து அறிய வருவதாவது:-

திக்கம் இராணுவ முகாமில் இருந்து வல்வைச் சந்தியூடாக இந்திய இராணுவத்தினர் காங்கேசன்துறைக்குச் செல்ல முற்பட்டனர்.

வல்வைச் சந்தியில் மறியலில் ஈடுபட்டிருந்தவர்கள் வீதியில் படுத்து மறித்தனர்.

சிலர் ஜீப்பின் சில்லுக்குள் தலையை வைத்துக் கொண்டார்கள்.

இதை அடுத்து ஜீப்பில் வந்த இராணுவ அதிகாரி விஜயசிங, மக்களின் கோரிக்கைக்கு இணங்க தமது இரண்டு ஜீப்புகளையும் திருப்பிக் கொண்டு திக்கம் முகாம் சென்றனர். (உ-ஒ-160)

வல்வையில் ஐவர் சாகும்வரை உண்ணாவிரதம்

வடமராட்சி, செப் 19

வல்வைச் சந்தியில் நேற்று முதல் ஐந்து பேர் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

வடமராட்சி தனியார் பேருந்து இயக்குனர் சங்கத்தைச் சேர்ந்த ஆ. நில்லையம்பலம் (தலைவர்) போ கருணாநந்தராஜா, நா. விக்னேஸ்வரன், து. விஸ்வநாதன், சு பாலச்சந்திரன் ஆகியோரே அந்த ஐவருமாவர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதம் பற்றி கவலையில்லை

என் போராட்டத்தை தடுக்காதீர்கள்!

திலீபனின் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 19

என் உண்ணாவிரதப் போராட்டத்தைநிறுத்துமாறு யாரும் என்னை வற்புறுத்த வேண்டாம்

இலட்சியத்துக்காகவே போராடுவார்கள் விடுதலைப்புலிகள். இந்தவகையில் நானும் போராடுகிறேன்.

நேற்று நான்காவது நாளாக உண்ணாவிரதம் இருந்த திரு. திலீபன் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

திலீபன் பேசும் போது அங்கு கூடி நின்ற மக்கள் கண்ணீர் விட்டு அழுததைக் காணக்கூடியதாக இருந்தது

திலீபன் மேலும்பேசியதாவது-

எமது போராட்டம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

19-09-1987
புரட்டாதி 03
சனிக்கிழமை

சுபநேரம்:
3.03முதல் 4.33வரை
ராகுகாலம்:-
9.03முதல் 10 33வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

திருமலையில் தமிழர்கள் மீது துப்பாக்கிச் சூடு!

பலர் பலி; 36 மணி நேர ஊரடங்கு

யாழ்ப்பாணம், செப். 19

திருகோணமலையில் நேற்று தமிழர்கள் மறியற் போராட்டம் நடத்திய வேளையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது பல தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என அறியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் ஏழு தமிழர் கொல்லப்பட்டதாக முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன.

ஆனால், இறந்தோரின் எண்ணிக்கை மூன்று என இந்திய வானொலி அறிவித்தது.

15 பேர்வரை இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

இதனையடுத்து நேற்று மாலை 6 மணி முதல் நாளைக்காலை 6 மணி வரை 36 மணி நேர ஊரடங்கு திருமலையில் பிறப்பிக்கப்பட்டது.

புலிகளின் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து மறியல் போராட்டம் நடத்தியோர் மீதே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இத்தாக்குதல்களை நடத்திய வேளை இந்திய இராணுவத்தினரும் அப்பகுதியில் பிரசன்னமாகியிருந்ததாக ஒரு செய்தி தெரிவிக்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விவரமோ உயிரிழந்தோர் எண்ணிக்கையை ஊர்ஜிதப்படுத்தும் தகவலோ செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

மறியற்போர் நேற்று திருகோணமலையின் பல பகுதிகளிலும் நடைபெற்றது.

ஓரிடத்தில் மறியற் போர் செய்தோருக்கு ஊடாக பவுசர் ஒன்று

(10-ஆ பக்கம் பார்க்க)

வடக்கிற்கு இன்டர் சிற்றி

கொழும்பு, செப். 19

வடமாகாணத்துக்கு இன்டர் சிற்றி ரயில் சேவை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இன்டர் சிற்றி சேவை ஆரம்பமாகும் போது கொழும்பு - யாழ் ரயில் சேவைகளின் நேர அட்டவணையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று தெரியவருகின்றது. (உ-எ)

கருத்துக் கலசம்

அகிம்சைப் போர்

ஜீவராசிகள் யாவற்றிடமும் அன்பு காட்ட வேண்டும் அவை மீது கருணை கொள்ளவேண்டும், இரக்கம் காட்ட வேண்டும் மதங்கள் பலவும் இவ்வாறு போதிக்கின்றன. ஜீவராசிகளுக்குத் துன்பம் செய்யக் கூடாது, இம்சைப்படுத்தக்கூடாது என்றும் அவை போதிக்கின்றன. ஜீவராசிகளைப் போலவே அடுத்த மனிதனுக்கு இம்சை செய்யக் கூடாது என்பதும் மத போதனை. அது அகிம்சை ஆகும். அகிம்சையை வெறும் மதக் கோட்பாட்டு நிலைக்கு அப்பால் கொண்டுவந்து உரிமைப் போருக்கு ஓர் ஆயுதமாகப் பாவித்தவர் காந்தி அடிகள்.

அம்பு கொண்டோ, துப்பாக்கி கொண்டோ பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் போராடாமல், அகிம்சை என்ற மிகக் கூரிய ஆயுதம் கொண்டு போராடியவர் அவர்.

அகிம்சை என்ற அறவழிப் போராட்டத்தின் ஓர் அங்கமே உண்ணாவிரதம் ஒருவன் தன்னை வருத்தி, தன் உடலை வருத்தி, தனது உரிமைகளுக்காகப் போராடும் ஒரு மார்க்கமே உண்ணாவிரதம். அதிலும் சாகும் வரை உண்ணாவிரதம் உயிரை அர்ப்பணித்துச் செய்யும் போராட்டம்- அது மகத்தானது.

மனோவலிமை உள்ள ஒருவனாலேயே அதனை அனுஷ்டிக்க முடியும். தனது நாட்டுக்காக, தனது மக்களுக்காக தன்னைத் தியாகம் செய்யும் மனப்பக்குவம் வந்தவனாலேயே சாகும்வரை உண்ணாவிரதத்தைக் கைக்கொள்ளமுடியும்.

அகிம்சையிலும் சரி, உண்ணாவிரதத்திலும் சரி இரண்டுவகைகள்உண்டு. நீதியான கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் அகிம்சைப் போராட்டம் உண்மையான அகிம்சை. நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படும் அகிம்சைப் போராட்டம் என்பது பலாத்காரத்துக்கு ஒப்பானது.

நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் அகிம்சைப் போராட்டங்கள் மதிக்கப்பட வேண்டியவை. அவற்றை மதித்து அகிம்சை ஆயுதத்துக்கு அடிபணியாத அரசோ அல்லது ஆட்சியோ வளைந்த செங்கோல் ஆட்சியாகக் கருதப்பட வேண்டும். மக்கள் மீது இரக்கமும் கருணையும் இல்லாத கொடுங்கோல் அரசாகக் கருதப்பட வேண்டும்

துப்பாக்கி, மற்றும் கொடிய யுத்த ஆயுதங்களைவிட அகிம்சை ஆயுதம் மகா சக்தி படைத்தது.

அதற்கு வளைந்துகொடுக்காத அரசு மக்கள் சக்தியினால் தாக்கப்பட்டுத் தோல்வி காண்பது நிச்சயம். நியாயமான அகிம்சைப் போராட்டத்துக்கு மதிப்பளிக்காது, மக்கள் சக்தியை உதாசீனம் செய்பவர்கள் நிலைத்து நிற்கமுடியாது. தோல்வியே காண்பார்கள்.

புதுமையும் எழிலும் பெருமையும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

தேவை

ஒட்டுவேலையும், கம்மாலை வேலையும் தெரிந்தவர்கள் தேவை. மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. சுவர்ச்சீராமான சம்பளம் வழங்கப்படும். உடனே நேரில் வரவும். பருத்தித்துறை பழைய D.R.O பணிமனைக்கு அருகாமையில்.

(1693)

அச்சுக்கோர்க்கக்கூடிய மெஷின் மானிட்டர் தேவை. நேரில் வரவும். பிரின்டிங் ஒர்க் சேர்க்கக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும். ஜெஸ்ஸி பிரின்டேர்ஸ், 360, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(1692)

மேலதிக ஆட்கள் தேவை. Cooks 4, வெற்றிடம், Cashier 4 வெற்றிடம், Waiters 4 வெற்றிடம் இருபாலரும், வயது 20 — 40 நேரில் வரவும். Greet Peking Palace 4ஆம் குறுக்கு, தெரு, யாழ்ப்பாணம்.

பிறந்தநாள் வாழ்த்து

புலோலி தெற்கு, ஹரிதேவ் - லோசேன் வரிதம் தியரின் புதல்வி தர்மினா இன்று 19 - 9 - 1987 தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

தர்மினாவை சலுதியிருக்கும் அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அன்ரிமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் பல்கலையும் பெற்றுச் சிரிப்போடு வாழ இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றார்கள்.

(1695)

கல்வி

பாலராசிரியர் பயிற்சி புதிய வகுப்பு விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த (சா/த) குறைந்த தகைமையாகும். சனி, ஞாயிறு தினங்களில் வகுப்பு நடைபெறும். தேசிய முறையிலும் கற்பிக்கப்படுகிறது. ஆர்வமுள்ள பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப் பங்குனம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(1519)

ஈரானு அல்லது ஈராக்கா ஆக்கிரமிப்பு நாடு?

இதனைக் கண்டுபிடிப்பதுமூலமே வளைகுடாவில் சமாதானம்

வளைகுடா யுத்தத்துக்கு முடிவுகாணுமுகமாக ஈரானுக்கும் ஈராக்குக்கும் விஜயம் செய்திருந்த ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் தமது முயற்சியில் வெற்றிகாணாதநிலையில் நியூயோர்க் திரும்பி இருக்கிறார்.

ஏழு வருடகால வளைகுடா யுத்தத்தில் ஐ.நாவினால் மேற்கொள்ளப்பட்ட பெரிய அளவிலான சமாதானமுயற்சி இதுவாகும்.

போர் நிறுத்தம் செய்யும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச்சபை கடந்த ஜூலை 20ஆம் திகதி ஏகமனதாக நிறைவேற்றி இருந்தது.

தீர்மானம் நிறைவேறி எழுமாதங்கள் கழிந்தும் ஐ.நா தீர்மானத்துக்குச் செவிசாய்க்கப்படுவதற்கான அறிகுறி எதுவும் தென்படாத நிலையில் பெரஸ் டி குயிலரின் வளைகுடா விஜயம் இடம் பெற்றது.

இவரின் விமானம் கடந்த ஞாயிறு இரவு பாக்தாக் விமான நிலையத்தில் தரை இறங்கிய சமயம் தனது தெஹ்ரான் விஜயத்துறைமுக நகரான பாஸ்ராமீது ஈரான் ஷெல்தாக்குதல் நடத்தியதாக ஈராக் குற்றஞ்சாட்டியது. எனினும் குயிலர் தனராது. தமது சமாதான முயற்சியைத் தொடர்ந்தார்.

பிற்போது ஈரானின் காரக்த்தீவில் உள்ள பிரதான எண்ணெய் நிலையங்களின்மீது ஈராக் தாக்குதல் நடத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து பெரஸ் டி குயிலர் நியூயோர்க் திரும்பியுள்ளார்.

இவரின் வளைகுடா விஜய நாட்களில் வளைகுடாப்பகுதியில் ஓரளவு அமைதி நிலவியபோதிலும் கார்க் தீவு எண்ணெய் நிலையங்கள் மீதான தாக்குதல் சம்பவம் சகல முயற்சிகளையும் மழுங்கடித்துவிட்டது என்றே கருதப்படுகிறது.

வளைகுடாவில் செல்லும் குவைத் எண்ணெய்க் கப்பல்களுக்கு அமெரிக்கா ஆகாய கடல் பாதுகாப்பை வழங்க ஆரம்பித்ததை அடுத்து வளைகுடா யுத்தம் ஒரு புதிய திருப்புமுனைக்குள் பிரவேசித்திருந்தது.

அதாவது அமெரிக்காவையும் யுத்தத்துக்குள் இழுத்து விடக்கூடிய பேராபத்து ஏற்பட்டிருந்தது?

சீனாவின் சில்க்வோர்ம் ஏவுகணைகள்மூலம் வளைகுடாவில் செல்லும் கப்பல்கள் ஈரானால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்தே அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்திருந்தது.

இந்த நிலையிலேயே ஐ.நா பாதுகாப்புச்சபை கூடி கடந்த ஜூலை 20ஆம் திகதி யுத்தநிறுத்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருந்தது.

ஐ.நாவின் யுத்தநிறுத்தத் தீர்மானத்தை ஈரான் நின்று உத்தியோகபூர்வமாக நிராகரிக்கவில்லை. ஆனால் தீர்மானத்தை நிராகரித்து ஈரானிய தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த யுத்தத்தினால் வங்குரோந்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள ஈராக் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால் தீர்மானம் முழுஅளவில் அமுல்படுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தது.

ஏற்கனவே ஏழு தடவைகள் யுத்தத நிறுத்தக் கோரிக்கை விடுத்த ஐ.நா முதற்தடவையாக யுத்த நிறுத்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

ஐ.நா பொதுச்செயலாளரின் வளைகுடா விஜயம் நுரெம்பேர்க் விசாரணையை ஒத்தது என்று ஈரான் சாடியுள்ளது. ஈரான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாஜித் தலைவர்களை விசாரிப்பதற்காநுரெம்பேர்க் விசாரணை மன்றம் இரண்டாம் உலக மகாயுத்த இறுதியில் நடத்தப்பட்டது.

ஈராக்கில் சத்தாம் ஹுசேயின் ஆட்சியைக் கவிழ்த்து ஈரானியர்களின் ஆட்சியைக் கொண்டுவருவதில் ஈரானிய ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஐ.நா பொதுச்செயலாளரின் வளைகுடா விஜயத்தின் பிரதான நோக்கம் வளைகுடா தொடர்பான ஐ.நா தீர்மானத்தை ஈரான் ஏற்றுக் கொள்ளவைப்பதே.

"யுத்தத்தை ஆரம்பித்த நாடு ஈராக். அதனை ஆக்கிரமிப்பு நாடாக ஐ.நா பிரகடனப்படுத்தவேண்டும் என்பதே ஐ.நா பொதுச்செயலாளரிடம் ஈரானிய பிரதமர் முஸாவி விடுத்த பிரதான கோரிக்கை ஆகும்.

அதேபோன்று ஈரானை ஆக்கிரமிப்பு நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று ஈராக்தலைவர் சத்தாம் ஹுசேய்ன் கோரிக்கை விடுத்தார்.

ஐ.நா தீர்மானம் முழு அளவில் அமுல்படுத்தப்படவேண்டும் என்றும் யுத்த நிறுத்தக்கோரிக்கைக்கு ஈரான் இணங்காது ஐ.நா தீர்மானத்தை உதாசீனம்செய்யும் பட்சத்தில் ஐ.நா தனது அடுத்த நடவடிக்கையைத் தொடரவேண்டும் என்றும் ஈராக் தலைவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த தீர்மான வரிசையில் ஐ.நாவின் அடுத்த நடவடிக்கை ஆயுதத் தடைவிதிப்பே.

வெளிநாட்டு ஆயுதம் எதுவுமின்றி தம்மால் இன்னும் பல ஆண்டுகளுக்கு யுத்தத்தை நடத்தமுடியும் என்று ஈரானிய தலைவர்கள் ஏற்கனவே அறைகூவல் விடுத்துள்ளனர்.

ஐ.நா பொதுச்செயலாளரின் வளைகுடா விஜயம் நுரெம்பேர்க் விசாரணையை ஒத்தது என்று ஈரான் சாடியுள்ளது. ஈரான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாஜித் தலைவர்களை விசாரிப்பதற்காநுரெம்பேர்க் விசாரணை மன்றம் இரண்டாம் உலக மகாயுத்த இறுதியில் நேசநாடுகளினால் ஏற்படுத்தப்பட்டது.

ஈராக்கில் சத்தாம் ஹுசேயின் ஆட்சியைக் கவிழ்த்து ஈரானியர்களின் ஆட்சியைக் கொண்டுவருவதில் ஈரானிய ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நாடுகளும் தமது கடும்போக்கில் இருந்து விடுபட்டால்தான் வளைகுடாச் சமாதானம் வெகுவிரைவில் நிலவும்.

லங்கா சீமெந்து லிமிட்டெட்

LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI

பொதிநிரப்பு நிலையத்தில் (PACKING PLANT) இருந்து சீமெந்தை பொதுகளை கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எமது உப களஞ்சியங்களுக்கு லொறிவண்டிகளில் ஏற்றிச் செல்லுதல்.

எமது பொதிநிரப்பு நிலையத்தில் இருந்து கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது உப களஞ்சியங்களுக்கு சீமெந்துப் பொதிகளை லொறி வண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கான சேவைப் பத்திரங்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

மேற்படி சேவைப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர், காரியாலயத்தில் மீளப் பெற முடியாத ரூபா 500/- செலுத்தி கிழமை நாட்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி சேவைப்பத்திரங்கள் 26-09-87 அன்று நண்பகல் 12.00 மணிக்குப் பின் விநியோகிக்கப்படமாட்டாது.

சேவைப்பத்திரங்கள் 28-09-87 அன்று காலை 10.00 மணிக்கு முன் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள சேவைப்பத்திரப் பெட்டகத்தில் சேர்க்கப்படவேண்டும். சேவைப்பத்திரங்கள் 28-9-87 அன்று காலை 10.30 மணிக்கு குறிக்கப்படும்.

பிரதி பொது முகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்
16-09-87 காங்கேசந்துறை.

20ஆம் நூற்றாண்டின் 'போக்கிரி ராஜா'

சோவியத் சிறையில் வாடுகின்றான்

இந்த நூற்றாண்டிலேயே மிகப்பெரிய 'கிறுக்குத்தனம்' பண்ணிய பெருமை மேற்கு ஜேர்மனி இளைஞனுக்குக் கிடைத்திருக்கிறது.

அதற்காக இன்று அவன் சிறை ஒன்றில் நான்கு ஆண்டுகாலத் தண்டனை அனுபவித்து வருகின்றான்.

மத்தியாஸ் ரஸ்ற் 19 வயது மேற்கு ஜேர்மன் இளைஞன்; விமான மோட்டியங்கூட.

கடந்த மே மாதம் ஒரு நாள்....

ஒரிய செஸ்னா 172 இலக்க விமானம் ஒன்று ஹெல்சிங்கியில் இருந்து புறப்பட்டான்.

பறந்து, பறந்து, சோவியத் ஆகாயப் பிராந்தியத்திற்கு அத்து மீறி நுழைந்தான்.

பின்னரும் விட்டு வைக்கவில்லை. சோவியத் பிராந்தியத்தினுள் சுமார் ஐந்நூறு மைல் தூரம் பறந்து தலைநகரான மாஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் வந்து இறங்கினான்.

கிறெம்ளின் மாளிகை அருகே தன்னந்தனியனாக வந்திறங்கிய அவனை அதிசயத்துடன் மாஸ்கோ வாசிகள் பார்த்தனர்; ஆத்திரத்துடன் சோவியத் பாதுகாப்பு அதிகாரிகள் பார்த்தனர்.

ஆத்திரத்தின் பலன் பாதுகாப்பு அமைச்சர் சொக்கி சொகொலோவ் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

சோவியத் விமானப் படைத் தளபதி அலெக்ஸான்டர் கொல்டுனேவ் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்.

மத்தியாஸ் ரஸ்ற் கைது செய்யப்பட்ட சில மணித்தியாலங்களில் இப்பதவி நீக்கங்கள் இடம் பெற்றன.

சோவியத் இராணுவத்தின் அடிமட்டத்தில் இன்னும் இது தொடர்பான 'களை எடுப்பு' நடந்து கொண்டே இருக்கின்றது.

உலகின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கும் வல்லரசு ஒன்றின் வானப்பிராந்தியத்தினுள் 'பொடிப் பயல்' ஒருவன் ஊடுருவியது கிறெம்ளின் மாளிகையை உலுப்பி விட்டது.

சோவியத் புலனாய்வுப் பிரிவான கே.ஜி.பியின் சிறை ஒன்றில் ரஸ்ற் மூன்று மாதகாலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டான்.

மேற்கு நாட்டு உளவு ஸ்தாபனங்களின் சதிவேலைகளில் ஒன்றுதான் ரஸ்டின் ஊடுருவல் என்று சோவியத் அதிகாரிகள் சந்தேகித்தனர்.

கே.ஜி.பி சிறையில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது, ரஸ்டின் உறுதியை மாற்றவில்லை.

சோவியத் 'விஜயம்' எனது சொந்த 'ஐடியாவே' — இப்படி உறுதியாகக் கூறினான் ரஸ்ற்.

'விமானத்தில் போய் செஞ்சதுக்கத்தில் இறங்கிய பின்னர் என்ன நடக்கும் என்று நான் இறங்கும்வரை நினைக்கவே இல்லை' — இவ்வாறு ரஸ்ற் சோவியத் அதிகாரிகளிடம் ஒப்புக் கொண்டான்.

இறுதியாக மத்தியாஸ் ரஸ்ற் மாஸ்கோ சுப்ரிம் கோர்ட்டின் முன்னர் மூன்று குற்றச்சாட்டுக்களின் மீது நிறுத்தப்பட்டான்.

★ ஆகாயப் பிராந்தியத்தினுள் சட்டவிரோதமாகப் பிரவேசித்தது.

★ விஸா இன்றி செஞ்சதுக்கத்தில் வந்திறங்கியது.

★ வேண்டும் என்று போக்கிரித்தனம் பண்ணியது.

முதல் இரண்டு குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொண்ட மத்தியாஸ் ரஸ்ற், மூன்றாவது குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

விசாரணையின் போது ரஸ்டுக்காக சோவியத் அரசு, சோவியத் வழக்கறிஞர் ஒருவரை நியமித்தது.

'ரஸ்டின் கண்கள் ஊடாக நாம் உலகைப் பார்க்க வேண்டும்'— இப்படி ரஸ்டின் சோவியத் வழக்கறிஞர் வாதாடினார்.

அரசு வழக்குத் தொடருநர் 'எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும்'— என்று கடுமையாக வாதாடினார்.

இரண்டு நாட்கள் விசாரணை நடந்தது.

உலக சமாதானத்தை வளர்க்கவே தான் இப்பயணத்தை மேற்கொண்டதாக ரஸ்ற் கூறினார். நீதியரசர் சிக் கோமிரோவுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

நீதியரசர்: சமாதானப் பணிக்கு முறைப்படியான வழிகளில் ஈடுபட்டிருக்கலாமே.

ரஸ்ற்: இந்தப் பயணம் எனது நோக்கத்தை அடைய உதவும் என்று எண்ணினேன். அது இவ்வளவு எதிரொலியைக் கொண்டு வரும் என்று நான் நினைக்கவில்லை.

நீதியரசர்: சொந்த நாட்டில் சமாதானயாத்திரை எதிலும் பங்கு பற்றி இருக்கின்றீரா?

ரஸ்ற், இல்லை.

விசாரணை முடிவில் மூன்று குற்றச் சாட்டுகளுக்கும் ரஸ்ற் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

நான்கு ஆண்டு கால சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது.

"எனது வாழ்வில் நான் விட்ட பெரிய தவறு இது" — இப்படி ரஸ்ற் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முழுத் தண்டனைக் காலத்தையும் அனுபவிக்கும் முன்னர் ரஸ்ற் விடுவிக்கப்படுவானா?

இந்த ஊகத்தின் மத்தியில் மத்தியாஸ் ரஸ்ற் சிறையில் தன்னினை அனுபவிக்கத் தொடங்கி விட்டார்.

எப்படி இருந்தாலும் இந்த நூற்றாண்டின் தலை சிறந்த 'போக்கிரி ராஜா' என்ற பெயர் இவருக்கு கிடைத்து விட்டது.

இந்த நூற்றாண்டின் 'போக்கிரி ராஜா'வான மேற்கு ஜேர்மன் இளைஞன் சோவியத் சிறையில் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றான்.

அதுபற்றி விவரிக்கின்றது இக்கட்டுரை

-எஸ் ஜி-

வாசகர் தராசு

கிழக்கிலங்கையின் அரசியல், சமூகப் போக்குகள் இடம்பெறுதல் வேண்டும். தமிழர், முஸ்லிம்களின் ஐக்கியம், புரிந்துணர்வு, அடிப்படை இணக்கம் என்பன வலிமை பெறவும், வளமடையவும் உதயனும், சஞ்சீவியும் கணிசமான பங்களிப்பை வழங்கவேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுகின்றேன்.

உதயன், சஞ்சீவியின் வருங்காலப்பணி, வடக்குக் கிழக்கின் புத்தெழுச்சி — புத்தமைப்புக்கு வழிகோலுவதாக. நன்றி.

மீ. மு. சாலிற்
ஐயன்கேணி, ஏழுதூர்.

சஞ்சீவியின் "விலை அதிகரிப்போடு, பக்கங்களையும் அதிகரித்துள்ளீர்கள். இச்செயல் வாசகர்களாகிய எம் அன்பு நெஞ்சங்களுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியை அளிக்கின்றது.

மழுராவின், 'கருத்துக்கலசம்; நாட்டு, உலக நடப்புச் செய்திகள், உலகஉலா, பாடம்பயில்வோம், நூல் வரிசை, தாயகம், சிறுகதை, கவிதைக்கூதம்பம் 'சொற்கிலம்பம்', விளையாட்டு விமர்சனம், 'குறுமுனியின்' - உள்ளும் புறமும். — இப்படியாகப் பல் சுவைகளும் நிரம்பிய பகுதிகளை விரும்பி வாசிக்கும்பொழுது, மிகுந்த மனச்சந்தோஷம் உண்டாகின்றது. பாராட்டுக்கள்.

கே. இராஜகோபால்
"பொன்மனை"
தொல்புரம், கலிபுரம்.

பொ. சண்முகநாதனின் 'சேறும் தண்ணீரும்' என்ற ஒரு மாதக்குறுநாவல் சிறப்பாக இருந்தது. தொடர்ந்தும் இது போல நல்ல நாவல்களை எதிர்பார்க்கிறேன்.

தொடர்ந்து வரும் பேட்டி நிகழ்ச்சி சிறப்பாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கிழமையும் பேட்டியை ரசித்து வாசிக்கிறேன்.

நீதிமன்றத்துக்கு வந்த உண்மைச் சம்பவம் ரசிக்க முடிகிறது. குறுக்கெழுத்துப் போட்டியும் சுவையாக உள்ளது.

கா. சதானந்தன்
[illegible] வேக்ஸ், வண்ணார்பண்ணை.

1988 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகைமைச் சான்றிதழ் வழங்குதல்

(ISSUE OF FITNESS CERTIFICATES- 1988)

1988-ஆம் ஆண்டுக்குரியவாகனத்தகைமைச் சான்றிதழ்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள மோட்டார் லொறி, பஸ் ஆகிய வாகனங்களில் 01. 10. 1987 முதல் வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வட பிராந்திய போக்குவரத்துச்சபைக்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிப்புரையின் பிரகாரம் பின்வரும் எமது சாலைகளில் வாகனங்கள் பரிசோதனை செய்யப்படும்.

1) கோண்டாவில் 2) காரைநகர்
3) பருத்தித்துறை 4) கிளிநொச்சி
5) முல்லைத்தீவு 6) வவுனியா
7) மன்னார்

வாகன உரிமையாளர்கள் வாகனச்சான்றிதழ் பெறுவதற்கு மேலதிக விபரங்களுக்கு திரு. க. தனபாலசிங்கம், பொதுஜன தொடர்பு அதிகாரி, வட பிராந்திய போக்குவரத்துச் சபை தலைமை அலுவலகம், பலாலி வீதி, கோண்டாவில் அல்லது சாலை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

கி. கனகரத்தினம்
தலைவர் / தகவுடை அதிகாரி
வட பிராந்திய போக்குவரத்துச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது நிதி நிலைமை அறிக்கையை பார்த்தவுடனேயே எம்முடன் முதலீடு செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்று நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள்,

எமது வளர்ச்சி வேகமே எமது உறுதியான நிலைப்பாட்டிற்கு அத்தாட்சியாகும் வங்கித்துறையில் 20 வருடத்திற்கு மேல் அனுபவம் பெற்ற ஆளணியினரைக் கொண்டுள்ள எமது நிர்வாகம் உங்களுக்குத் தேவையான நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் அளிக்கும். எந்தவொரு வங்கியைப போலவும் எமது தொழிலும் கடன் கொடுத்தலும் நிதி வசதி செய்து கொடுத்தலுமேயாகும்.

இதில் பிரதானமானது நிதி வசதி செய்துகொடுத்தலே, எமது வைப்பாளர்களுக்கு சிறந்த கண்ணியமான, உடனுக்குடன் சேவை வழங்குவதே எமது சிறப்பாகும். இதனால் தான் நாங்கள் முதலீட்டு துறைகளில் உங்கள் உற்ற நண்பனாகவும் இருந்து வருகிறோம்.

நிலையான முதலீட்டுத் திட்டம்

காலம்	மாதாந்தம்	முதிர்ச்சி
3 மாதங்கள்	—	14 %
6 மாதங்கள்	—	16 %
12 மாதங்கள்	16 %	18 %
24 மாதங்கள்	18 %	20%
36 மாதங்கள்	20%	22%

நிறுவனத்தின் நிதி நிலை விவரம்

	1984/85	1985/86	1986/87
மூலதனம்	2,230,000	4,365,000	5,917,000
மொத்த ஒதுக்கம்	1,383,335	3,030,474	5,425,354
வைப்பு	27,737,553	58,970 366	100 577,492
வங்கிக்கடன்கள்	1,791,516	8,283,816	7,718,284
ரொக்கமும் வங்கி இருப்பும்	4 386,271	16,206,897	25,811,712
வைப்பாளருக்கான வட்டி செலுத்துமுன் லாபம்	5 783,720	9,878,026	19 310,887
வைப்பாளருக்கான வட்டி	3,827,514	8,505,201	16,880,875
வரி செலுத்துமுன் தேறிய லாபம்	1,956,206	1,372,825	2,430,012
வரி செலுத்தியபின் தேறிய லாபம்	1,356 206	1,372,825	2,330,012
பங்காளருக்கான சலுகைகள்	—	—	

31-3-1987 மொத்த ஆஸ்திகள் ரூபாய் 140 கோடிக்கு மேல்

உங்கள் நலனே எமது குறிக்கோள்

மேலதிக விபரங்களுக்கு

ஷூப்ரு
யூனிக்கோ பினான்ஸ் லிமிட்

இலங்கை நிதி நிறுவன சங்கத்தின் அங்கத்துவ நிறுவனம்
மத்திய வங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்
61. பௌத்தலோக மாவத்தை கொழும்பு 4

தொலைபேசி: 589310, 500576 தந்தி: UNISHAB

வைப்புச் சான்றிதழ்த் திட்டம்

காலம்	சான்றிதழின் விலை	வட்டி வீதம் வருடத்துக்கு	முதிர்வு சான்றிதழின் பெறுமதி
6 மாதங்கள்	4,619/-	16½%	5,000/-
	9,238/-		10,000/-
	46,190/-		50,000/-
	92,379/-		100,000/-
12 மாதங்கள்	4,220/-	18½%	5,000/-
	8,439/-		10,000/-
	42,195/-		50,000/-
	84,389/-		100,000/-
24 மாதங்கள்	3,547/-	20½%	5,000/-
	7,093/-		10,000/-
	35,461/-		50,000/-
	70,922/-		100,000/-
36 மாதங்கள்	2,986/-	22½%	5,000/-
	5,971/-		10,000/-
	29,851/-		50,000/-
	59,702/-		100,000/-

வியாபாரத்தின் முக்கிய நிலைகள்

- எல்லாவகையான வாகனங்களும் வாடகைக் கொள்வனவு முதலீடு,
- வாகனங்கள் குத்தகை நிதிவசதி,
- வர்த்தக இறக்குமதிக் கடன்,
- இறக்குமதி ஏற்றுமதி,
- குறுகிய வர்த்தகக் கடன்கள்
- வாக்குறுதிக் கடன்கள்

இயக்குநர்கள்

L. P. E. கருணாரத்தின.
சட்டத்தரணி J. P. U. M. (தலைவர்)
S. பாலசுப்பிரமணியம்
A. I. B (Lon) (நிர்வாக இயக்குநர்)
J. D. நவரத்தினம் A. I. B. (Lon)
(இயக்குநர் பொதுமுகாமையாளர்)
O. L. A. M. பாரி B.A. (Hons)
R. பாலசுப்பிரமணியம்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி:- 29 -9 - 1978

யாழ் முகவர் :-
207, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவள் மனதில் ஒரு வேதனை

சஞ்சீவி சிறுகதை

நேரம் நாலுமணியையும் தாண்டிவிட்டது. இன்னும் ராஜனைக் காணவில்லையே என்று எண்ணிய ரீச்சர் ரஞ்சனி, பாடசாலைக் கேற்றைப் பார்ப்பதும், விசியாடிக் கொண்டும், தங்கள் கார்களை, வான்களை, எதிர்பார்த்து நிற்கும் மாணவிகளைப் பார்ப்பதுமாக இருந்தாள். ஒவ்வொரு காராக மாணவிகளை ஏற்றிக்கொண்டு சென்றது அவள் கணவன் ராஜன் கூட பாடசாலை விடுவதற்கான மணி மூன்று முப்பதிற்கு அடிக்கும் போதே கேற்றடியில் மோட்டார் சைக்கிளுடன் காத்திருப்பான். ஆனால் இன்று என்ன நடந்தது... என்று சிந்தித்தபடியே நின்ற ரஞ்சனியை,

''ரீச்சர்''..., என்ற மென்மையான குரல் திடுக்கிட்டுத் திரும்பச் செய்தது. ஓ, ஷாமந்தி, ஏம்மா? இன்னும் அப்பாவோட கார் வரல்லையா? ஸ்கூல், விட்டதுமே உன்னை கூட்டிக்கொண்டு போயிடுவாரே ''என்று ஷாமந்தியின் தலையை மெல்ல வருடினாள்.

இல்லை, ரீச்சர், எங்கப்பா இண்ணைக்கு லேட்டாத்தான் வருவனே, என்று சொன்னார். ஏன் என்று, நாங்க திங்கட் கிழமை லண்டனுக்குப் போறமாம். - 'ஒபிசில்' நிறையவே வேலையிருக்காம்.....என்று ஷாமந்தி சொல்லிக் கொண்டே போனாள்.

ஆனால், நாங்க லண்டனுக்கு போறோமாம் என்று சொன்னதுமே ரஞ்சனிக்கு இதயமே வெடிச்சிடும் போல இருந்தது, தலை சுற்ற ஆரம்பித்தது. உடலில் ஒரு பதற்றம், கால்களை மடக்கி குழந்தையின் உயரத்திற்கேற்ப அமர்ந்தவள், என்னம்மா சொன்னே? லண்டனுக்கா,''என்று பதறியபடியே கேட்டாள். கண்களில் கண்ணீர் தானாக வடிந்தது.

''ஏன் ரீச்சர் அழுகிறீங்க?'' என்று ரஞ்சனியின் கண்ணீரைத் துடைத்த ஷாமந்தி, 'ரீச்சர் நான் பெரிய வளானபிறகு தானும் சிலோனுக்கு வரலாம், அப்போ நான் உங்களைப் பார்க்க வருவேன். நீங்க என்னை மறந்திடுவீங்களா?'' என்று கவலையுடன் கேட்டாள். அவளை அள்ளி அணைத்த ரஞ்சனி இல்லம்மா, நான் உன்னை மறக்கமாட்டேன் உன்னைக் கண்ட பிறகு தானேம்மா, வாழ்க்கையிலேயே ஒரு பிடிப்பை வைச்சேன், என்று அவள் கன்னத்தில் மாறி, மாறி முத்தமிட்டாள்.

தகப்பனின் கார் 'ஹோர்ன்' கேட்டதும் எல்லாவற்றையும் மறந்து ஹாய், அப்பா வந்தாச்சு, அப்பா வந்தாச்சு என்று ஓடிய குழந்தையை, ''நில்லம்மா, நானே உன்னைக் காரில ஏத்தி விடுகிறேன்''என்று அழைத்துப் போனாள்.

ரஞ்சனி காரை நோக்கி வருவதைக் கண்ட நிரஞ்சன் குழந்தைக்காக கார்க் கதவைத் திறந்து விட்டு எங்கோ பார்வையைச் செலுத்தினான். காரை நெருங்க, நெருங்க ரஞ்சனியின் நெஞ்சு படபடத்து கால்கள் தள்ளாடத்தொடங்கின. காரை அண்மித்ததுமே, இது உங்களுக்கே நல்லாயிருக்கா? நான் தப்புச் செய்தவதான். அதுக்காக இவ்வளவு பெரிய தண்டனையா? என் கண்ணில் கூட படக்கூடாது என்று லண்டனுக்குப் போறீங்க, பிளீஸ் என்னை மன்னிச்சிடுங்க, என்னைப் பழிவாங்காதீங்க''என்று காரில் தலையை வைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள் ரஞ்சனி.

இப்பார்வையை அவள் பக்கம் திருப்பாமலே, நான் யாரையும் பழிவாங்கல்லை, எனக்கு என் பெண்ணுடைய வாழ்க்கைதான் முக்கியம். அவள் அம்மா மாதிரி நான் சுயநலக்காரனல்ல, நான் என் கடமையை மறக்க மாட்டேன் அறியாத வயசில புரியாத சில விசயங்கள் வளர்ந்து வரும் அவள் உள்ளத்தைப் பாதிக்கலாம், அதனால இந்த நாட்டை விட்டே போறேன்.

வேறு என்ன சொன்னீங்க? மன்னிப்பா? நான் யார் உங்களை மன்னிக்க உங்களுக்கும் எனக்கும் என்ன ஒட்டா? உறவா? மிஸஸ் ராஜன், ''என்று, அந்த மிஸஸ் ராஜனில் ஓர் அழுத்தம் கொடுத்துப் பேசிவிட்டுக் காரைக் கிளப்பிக் கொண்டு விட்டான் நிரஞ்சன்.

ராஜனுக்காகக் காத்திராது ஓர் ஓட்டோவில், வீட்டை வந்தடைந்தவள் நேரே தன் அறைக்கு ஓடிப் படுக்கையில் விழுந்து புரண்டழுதாள். ரஞ்சனியின் செயலைக் கண்ட அவள் தாய் ஏன் ரஞ்சனி, என்ன நடந்தது என்றாள் பதற்றத்துடன்.

போங்க, எனக்கு ஒருத்தரும் வேண்டாம், எல்லோருமாக என்னோட வாழ்க்கையையே அழிச்சிட்டீங்களே, என்னை ஏன் ராஜனுக்கு கலியாணம் செய்து வைச்சீங்க? நான் தனியாகவே இருந்திருந்தால் அவர் என்னை மன்னிச்சிருப்பாரே, என்று ரஞ்சனி கத்தியதைக் கண்ட தாய் மெல்ல அவள் அறையை விட்டு வெளியே வந்தாள். ஷாமந்தியைக் கண்ட பின் இப்படித்தான் தன் இயலாமையை நினைத்து வீட்டிலுள்ளவர்களுடன் சண்டைப்பிடிப்பாள்.

(2)

கட்டிலில் படுத்து அழுது ஓய்ந்தவளின் கண்முன்னே அவள் கடந்த காலப் பாதை நீண்டு கொண்டே போனது....., ரஞ்சனி அந்தப் பாடசாலையில் க. பொ. த. உயர்தரம் படித்துக் கொண்டிருந்தாள். அவள் வகுப்பில் புதிதாக வந்து சேர்ந்தான் நிரஞ்சன். எல்லா மாணவர்களுமே நிரஞ்சனை பேட்டி காண ஆரம்பித்தார்கள். மாணவ, மாணவிகளின் விஷமக் கேள்விகளுக்கெல்லாம் நிரஞ்சன் சாதுரியமாகப் பதிலளித்தான்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ரஞ்சனிக்கு அவன் ஒரு டாக்டரின் மகன் என்றும். தகப்பன் வேலை மாற்றலாகி இந்த ஊருக்கு வந்திருப்பதால் அவன் குடும்பமே இங்கு வந்திருப்பதையும் அறிந்தாள். நிரஞ்சனின் பேச்சும், அவன் கம்பீரமும், அவனது பழக்கவழக்கங்களும் ஓர் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று பறை சாற்றியது.

அன்று பாடசாலையில் பரிசளிப்பு விழா, ரஞ்சனியின் நாட்டியமும் நடைபெற்றது. நிரஞ்சனுக்கு கலை விசயத்தில் ஈடுபாடு அதிகமாகவே இருந்தது. ரஞ்சனியின் நாட்டியத்தை ரசித்துப், பார்த்தவன் மறுநாள் ரஞ்சனியைச் சந்தித்த போது... மிஸ், ரஞ்சனி, உங்க நாட்டியத்தை நேற்றுப் பார்த்தேன். நீங்க, டான்ஸ் பண்ணுவீங்க என்று எனக்குத் தெரியாது. ரொம்ப நல்லாயிருந்தது என்று பாராட்டியபோது, ஓ, தாங்ஸ், என்று வெட்கத்துடன் ஓடிவிட்டாள் ரஞ்சனி.

ரசித்த நிரஞ்சன் நாட்கள் செல்லச் செல்ல ரஞ்சனியையே ரசிக்க ஆரம்பித்தான். செக்கச் சிவந்த நிறமும், அடர்த்தியான நீண்ட தலைமுடியும், கருவண்டுக்கண்களும், அவள் வாயால் பேசவே தேவையில்லை. கண்களே ஆயிரம் கதை சொல்லும், உதடுகள் பிரியாமல் சிரிக்கும் போது கன்னத்தில் அழகான குழி வேறு நிரஞ்சன் அவள் அழகில் சொக்கிப் போய் விட்டான்.

ரஞ்சனி நாட்டியத்தால் அடிக்கடி ஸ்கூலுக்கு வராமல் நின்று விடுவாள். நிரஞ்சனுக்குப் பாடமே ஓடாது. படிப்பில், விளையாட்டில் முதல் பரிசுகளைத் தட்டிச் செல்வான். ரஞ்சனி ஸ்கூலுக்கு வராத நாட்களில் நிரஞ்சனிடமே பாடங்களைக் கேட்பாள்.

ரஞ்சனி ஸ்கூலுக்கு வரும் போது அவள் மாமன் மகன் ராஜாவுடனே வருவாள். ராஜா சிறுவயதிலேயே தாயை இழந்து விட்டான். அதனால் ரஞ்சனி வீட்டிலேயே வளர்ந்து வருபவன். ராஜா தனக்கு என்றொரு கொள்கை இல்லாவதன் ரஞ்சனியின் தாய், தந்தையின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பவன்.

ரஞ்சனி ராஜனுடன் வருவதை நிரஞ்சன் விரும்பவில்லை என்றதும் ரஞ்சனி அதைத் தவிர்த்து விட்டாள். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்ப ஆரம்பித்த போது பரீட்சையும் நெருங்க ஆரம்பித்தது.

பரீட்சை முடிந்து மறுமொழி வெளியாகியிருந்தது. நிரஞ்சன் 'என்ஜினியர்' படிப்புக்காகப் பல்கலைக்கழகம் சென்றான். ரஞ்சனி சாதாரண சித்தியையடைந்தாள். அவள் மேற்கொண்டு படிக்க விரும்பவில்லை. விடுமுறைக்கு வரும் போது ரஞ்சனியை கோயிலில் சந்தித்து மணிக்கணக்காகப் பேசுவான் நிரஞ்சன் 'என்ஜியரா'க வெளிவந்தபோது அவன் வீட்டில் திருமணப் பேச்சு எடுபட்டது. நிரஞ்சன் அதை மறுத்து ரஞ்சனியை தான் விரும்புவதாகச் சொன்ன போது....., வீட்டில் பெரிய ரகளையே நடந்தது - டேய் அவ ஒரு 'டான்ஸ்'காரி. அவ ஆடட்டும். நீ தாளம் போடு என்று கத்தினார் அப்பா.

இல்லையப்பா-அவ கலியாணத்துக்குப் பிறகு ஆடமாட்டா. நான் எது சொன்னாலும் அவ கேட்பா என்று தகப்பனை சமாதானப்படுத்தப் பார்த்தான், — ஆனால் அப்பாவோ.....

போடா, நீ எக்கேடாவது செட்டுப்போ. நீ ரோசமுள்ள ஆம்பளையானால் இந்த வீட்டுப் பக்கமே வராதே என்று கடைசித் தடவையாகக் கத்திவிட்டு அறைக்குள்ளே சென்று விட்டார்.

நிரஞ்சனின் தங்கையும், தாயும் தகப்பனுக்குப் பயந்தவர்கள். கண்ணீருடன் அவனைப் பார்த்தார்கள். நிரஞ்சனுக்குத் தகபபன் பேசிய கோணத்திலும் ரசிச்சேன். அப்ப நீ உன் பெற்றோருக்கு மகன். அது அவர்கள் விருப்பம். ஆனா, நீ இப்ப என் மனைவி, எனக்கு மட்டும் சொந்தமானவள். உன்னைப் பல கோணத்தில் பலர் ரசிப்பதை நான் விரும்பவில்லை. நீ எனக்கு மனைவியாக இருந்து என் அப்பாவுக்கு நான் போட்ட சவாலைக் காப்பாத்து. இதையெல்லாம் கலியாணத்துக்கு முன்பே சொன்னேன் தானே? 'ப்ளீஸ்' ரஞ்சனி என் எண்ணத்தைப் புரிஞ்சு கொள் என்று கடைகியில் கெஞ்சினான்.

ஏன் கலியாணத்திற்குப் பிறகு ஒருவரும் ஆடுவதில்லையா? என்ற ரஞ்சனிக்கு - அது அவரவர் விருப்பம். என் நிலைமை வேறு என்று முடித்தான் அவன். அடிக்கடி நாட்டியத்துக்கு அழைப்பு வருவதும் இவர்களுக்குள் சண்டை வருவதும் வழக்கமாயிருந்தது.

குழந்தை ஷாமந்தி பிறந்து எட்டு மாதம் வரை இவர்களுக்குள் சண்டை வர வாய்ப்பிருக்கவில்லை. ஒருநாள் ரஞ்சனிக்கும் இன்னும் சிலருக்கும் பாராட்டு விழா நடாத்துவதற்காக அழைப்பு வந்தது. நிரஞ்சனிடம் அவளைக் நாட்டிய ரஞ்சனி, நான் நாட்டியமாடப் போகவில்லை. அப்பாவும் அம்மாவுமாப் போகலாம் என்று சொன்னதும் நிரஞ்சன் தன் வீட்டைக் கடந்தே செல்ல வேண்டியிருந்தது. தன்னுடன் வந்த நண்பனையும் அழைத்துக்கொண்டு ஒரு 'ரீ' குடிச்சிட்டுப் போயிடலாம் வா என்று காரைக் கேற்றுக்குள் விட்டவன். நண்பனுடன் இறங்கிச் சென்று 'ஹோலிங் பெல்லை, அழுத்தியபோது 'பெல்' அலறும் சத்தத்துடன் குழந்தை ஷாமந்தியின் அலறலும் கூடவே கேட் குழந்தையின் அலறலைக் கேட்ட நிரஞ்சன் பெல்லை அழுத்தமாகவே அழுத்தினான். இடுப்பில் குழந்தையுடன் கதவைத் திறந்த வேலைக்காரி பதற்றத்துடன் நின்றாள். என்ன நடந்தது? குழந்தைக்கு என்ன? ரஞ்சனி எங்கே? என்று கேள்விகளை அடுக்கியபடியே குழந்தையைத் தூக்கினான். குழந்தையின் ஒரு கை துணியால் மூடிக் கட்டியிருந்தது.

ஐயா, அம்மா பாராட்டுவிழா விஷயமாக ஏதோ கதைக்கவென்று, நீங்க வரமுன்பே தான் வந்திடுவேனென்று போற, குழந்தையை தூங்கவைச்சிட்டு குசினியில் வேலையாயிருந்தேன். அப்ப அம்மா வந்து, ரஞ்சனி, நான் நாட்டியமாடப் போகவில்லை. அப்பாவும் அம்மாவுமில்லாமல் புகழுக்கு ஆசைப்படுறவ ஒரு பெண்ணா? இவளை நம்பி என் குழந்தையை ஒப்படைக்கலாமா? இன்றைக்கு கையைச்சுட்ட குழந்தையின் உயிருக்கே ஆபத்து வரும்படியா ஏதும் நடந்திருந்தா... என்று பேசிக்கொண்டே போனவளை

இல்லைத்தம்பி... அவ... வந்து...என்று ஆரம்பித்த தாயை நோ. நீங்க எதுவும் சொல்ல வேண்டாம், உங்க 'அட்வைஸ்' கேக்க நான் வரல்லை என் முடிவைச் சொல்லவந்தேன்-என்றவன் குழந்தையை காரில் இருத்தியபடி வீட்டுக்குப் போன போதும் ரஞ்சனி வரவில்லை. நிரஞ்சன் வாழ்க்கையிலேயே நான் தோற்றுப்போனதாக எண்ணினான், கண்கள் சிவந்து, தலை கலைந்து, முகமே கறுத்துப் பார்க்கவே பயங்கரமாயிருந்தான். தனக்கும், குழந்தைக்கும் தேவையானவைகளை 'பாக்'கில் வைத்து மூடி காரில் வைத்தவன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே வரும்போது ரஞ்சனி உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

என்னங்க?...எங்கே போறீங்க குழந்தை

(3)

அன்று மத்தியானம் ஒரு கட்டிடத்தைப் பார்வையிட்டு திரும்பிய 'அயன்' பண்ணிட்டு வைச்ச 'அயன்பொக்ஸில்' தவறுந்துபோய் கையை வைச்சிட்டா என்றுதயங்கியபடியே சொன்னான். என்ன? நிரஞ்சன் குழந்தையை பொறுப்பில்லாமல் விடலாமா? என்று நண்பன் கேட்டதும், கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் மேலும் நெய் விட்டமாதிரி இருந்தது நிரஞ்சனின் நிலை.

வந்து கவனிக்கிறேன் என்றவன், குழந்தையைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு, 'ஹாஸ்பிட்டலு'க்கு ஓடினான். மருந்துபோட்டு சொக்கனேற், பிஸ்கற் எல்லாம் கொடுத்து குழந்தையை சமாதானப்படுத்திய வனின் மனம் சமாதானமடையவில்லை. நண்பனை 'ஆபீசில்' இறக்கிவிட்டு வீடும் எழுதிக் கொடுத்துவிட்டு நேரே ரஞ்சனியின் தாய், தந்தையரிடம்போய் நடந்ததைக்கூறி என்னால் எனி உங்க மகளுடன் வாழமுடியாது. குழந்தை, கணவன், குடும்பம் என்ற எண்ணயுடன் என்று அவள் கேட்டபோது, 'பளார்' என்று அவள் கன்னத்தில் ஓர் அறை வைத்தான். அவள் நிலை தடுமாறி கதாகரித்துக் கொண்டு அவள் நிரும்பியபோது, கார் 'கேற்றை'த் தாண்டிவிட்டது. ரஞ்சனியின் தாய் தகப்பன் வந்தபோது எல்லாமே முடிந்துவிட்டது.

அவர்களும் ஒரு பாட்டம் அவளைத் திட்டித் தீர்த்தார்கள்-ஏன் இப்ப எல்லாரும் கத்துறீங்க? போனவர் கோபம் தீர வருவார்தானே? எனக்கு ஒரு ஆசையும் இருக்கக் கூடாதா என்று எல்லாரையும் அடக்கினாள். ஆனால் மாதம் ஒன்றுகியும் போன நிரஞ்சன் எங்கே இருக்கிறான் என்றே தெரியவில்லை. பதிலாக விவாகரத்து நோட்டீஸ்தான் வந்தது. நிரஞ்சன் போன ஒரு மாதத்தில் பல நிகழ்ச்சிகளுக்குப் போன ரஞ்சனி, விவாகரத்தை விடுதலையாக எண்ணி கையெழுத்திட்டாள். ரஞ்சனிக்கு எல்லா விஷயத்துக்கும் உதவியாய் இருந்தது ராஜன்தான்.

(4)

வருஷம் இரண்டான போதுதான் ரஞ்சனியை தனியே விடுவது நல்லதல்ல என்று எண்ணிய பெற்றோர் ராஜனை கலியாணம் செய்யும்படி வற்புறுத்தினார்கள். வாளாவெட்டி என்பதைவிட கலியாணம் செய்தால்தான் நிகழ்ச்சிகள் நடக்க பெருமையாக இருக்கும் என்றார்கள். உன் நாட்டியத்திற்கு தடை சொல்ல மாட்டான் என்றும் அவளை சம்மதிக்கச் செய்து ரஞ்சனி, ராஜனுக்கு கலியாணம் செய்து வைத்தனர். ராஜன் பெயருக்குத் தான் கணவன். ரஞ்சனியின் விருப்பப்படியே எல்லாம் செய்வான். ராஜனுடைய விருப்பு வெறுப்பை அவள் கட்டைசெய்வதேயில்லை.

ஐந்து வருசமான போது, ரஞ்சனியின் இளமைவேகம் குறைய, அவள் நாட்டியத்திற்கும் மதிப்பில்லாமல் போனது. அவளுக்கு வீட்டில் இருக்க ஆரம்பித்ததுமே குழந்தையின் எண்ணமும் மனதை வாட்ட ஆரம்பித்தது. நிரஞ்சனின் அன்புமுகம் அவள் இதயத்தை வேதனைப்படுத்தும். தனிமையில் அழுவதே வேலையாயிருந்தது. அவர் சொன்னது எவ்ளவு உண்மை. என் புகழோசை ஓய்ந்துவிட்டது. ஆனால் என் மகளின் மழலைமொழி கேட்டால் அதனால் ஏற்படும் பூரிப்பு ஓயாதே என்று புலம்புவாள். ராஜா காலையில் போனால் இரவு குடிபோதையில் வருவான் ரஞ்சனிக்கு தொந்தரவு கொடுக்கவேமாட்டான்.

அப்போதுதான் கொழும்பில் ஓர் பாடசாலைக்கு ஓர் நடன ஆசிரியை தேவை என்று பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. ராஜனுக்கும் கொழும்பில் வேலை மாற்றலாகியிருந்ததால் அவன் உதவியுடன் அந்த நடன ஆசிரியர் வேலையையும் பெற்றுக் கொண்டாள். அது ஒரு தரமான பாடசாலை. பெண்பிள்ளைகள் மட்டுமே படிக்கிறார்கள். எல்லாம் பணக்காரர் வீட்டுக் குழந்தைகள். குழந்தைகளுடன் பொழுதைப் போக்குவதில் இன்பத்தைக் கண்டாள். ஏழு வயதுப்பெண் குழந்தைகளைக் கண்டால் இப்படி இருப்பாளா என் மகள், எப்படி இருப்பாள்? என்னைப் போலவா? இல்லை அவரைப்போலவா என்று துடிக்கும் அந்தப்பேதை மனம்.

'அந்தப்பாடசாலையில் கலைவிழாவிற்கு நடன நிகழ்ச்சி ஒன்றுக்காக சின்னவகுப்பு மாணவிகளை தெரிவுசெய்ய அந்த வகுப்பிற்குள் நுழைந்தாள் ரஞ்சனி. ஒவ்வொருவராகக் கூப்பிடும்போது ஒரு கட்டிப்பெண் ஏன் ரீச்சர் எங்களைக் கூப்பிடுறீங்க என்று கேட்டாள். மெல்லச் சிரித்த ரஞ்சனி, 'டான்ஸ்' பழக்கத்தான் என்றாள். டான்ஸா?. என்று கண்களை மலர்த்தி ஆச்சரியத்துடன் கேட்டகுழந்தை 'ஐயாம் சொறி ரீச்சர்' எங்கப்பாக்கு டான்கன்னாலே பிடிக்காது. அதனால எனக்கும் புடிக்கலை என்று தன் இடத்தில் போய் அமர்ந்தாள். ரஞ்சனியின் இதயம் ஏனோ வேகமாக துடிக்க ஆரம்பித்தது. வாயில் கையை வைத்து நகத்தை கடித்தபடியே ரஞ்சனியைப் பார்த்தாள் அந்தக்குழந்தை. சுருண்டதலையும், குண்டுக்கன்னங்களும், நீண்ட நாசியும், செக்கச்சிவந்த நிறமும் நிரஞ்சனையே ஞாபகமூட்டியது.

உன் பெயரென்னம்மா? என்றாள் ரஞ்சனி ஒருவித ஆர்வத்துடன் ஷாமந்தி - நிரஞ்சன்என்றாள்பெரியபெண் மாதிரி. ஆவலையடக்க முடியாது ஓடிச்சென்று அவளை கட்டியணைத்து முத்தமிட்டாள். அதன் பின் ஒருநாளாவது அவளால் குழந்தையைகாணாது இருக்கமுடியாது. லீவு நாட்களில் அவள் பாடு திண்டாட்டம்தான். நிரஞ்சன் மறுகல்யாணமே செய்யவில்லையென்றறிந்து வெட்கித்தலை குனிந்தாள்.

ஷாமந்தியிடம் தான் தான் அம்மா என்று சொல்வோமா என்று சிலவேளைகளில் துடிக்கும் அந்தத் தாயுள்ளம். ஆனால் அதன் பின்விளைவு நிரஞ்சன் பிள்ளையை வேறு பாடசாலைக்கு விட்டுவிடுவான் என்று நினைத்து அடக்கிவிடுவாள். ஆனால் ஷாமந்தி அடிக்கடி அப்பா எங்க ரஞ்சனி ரீச்சர் நல்ல ரீச்சர் அப்பா, எனக்கு பிஸ்கட், ரொபி எல்லாம் தருவா என்று சொல்லச் சொல்ல நிரஞ்சனின் ஆராய்ச்சியில் ரஞ்சனி அங்கு 'டான்ஸ் ரீச்சர்' என்பதை அறிந்தான். விளைவு - அவள் இருக்கும் மண்ணை விட்டே புறப்படத்தயாராகிவிட்டான். இரு நாட்களாக அழுத ரஞ்சனி, ஓ இன்று திங்கட் கிழமை, அவர் இந்த மண்ணைவிட்டே போயிடப்போகிறார் என்று எண்ணியவள். பைத்தியம்பிடித்தவள்விமான நிலையத்தை நோக்கி ஒரு ஓட்டோவில் பறந்தாள். ஆனால் அவன் போகவும் விமானம் மேலே..., மேலே..., உயர்ந்து பறக்கவும் சரியாக இருந்தது. ரஞ்சனிக்கு தன்மீதே வெறுப்பு வந்தது. எனக்கு என்ன உரிமை? என் குழந்தையின் அழுகுரலோசையைக் கேட்டி ஓடினேனா, இல்லை அவள் மழலைமொழி கேட்டு ரசித்தேனா, எனக்கு தேவைப்பட்டதெல்லாம் புகழோசை..., எனக்கு இதுவேணும், ஆனாலும் என் மகள் என்றாவது வரமாட்டாளா?.....,

(யாவும் கற்பனை)

செல்வி குலமதி கணபதிப்பிள்ளை

அதன் பின், அவள் நாட்டிய ஆசிரியர் எங்கு நிகழ்ச்சி நடத்தினாலும் ரஞ்சனியும் அவள் தோழிகளும் ஆட வேண்டியிருக்கும். அங்கே முதல் வரிசையில் நிரஞ்சன் இருப்பான். ரஞ்சனிக்கும் நிரஞ்சன் இல்லாமல் ஆட ஏதோ போல் இருக்கும்.

நாட்டியத்தை மட்டும் யது அவமானமாகப் பட்டது வீட்டை விட்டுக் கோத்துடன் வெளியேறினான். ரஞ்சனி வீட்டிற்குச் சென்றவன் அவர்களுக்கு நடந்ததைக் கூறினான். கலியாணம் நடந்த பிறகு ரஞ்சனி ஆட மாட்டா என்று தான் தகப்பனுக்குச் கூறி யதாக நிரஞ்சன்சொன்ன போது..., ரஞ்சனி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய - இலங்கை சமஷ்டி அமைப்பு

அன்றைய கனவு இன்று நனவாகிறதா?

இரண்டாயிரம் ஆண்டுகளாக நாம் நண்பர்களாக இருக்கின்றோம் இல்லையா? அதனால் இலங்கை மக்களாகிய எம்மை என்றுமே இந்தியாசார்த்துக்கொண்டே இருக்கின்றது.

இந்த நட்புறவு எமது கலாசாரம், மொழி, பழக்க வழக்கங்களை உருவாக்கியது.

இந்தியாவின் சில இனங்களுக்கும் எமக்கும் இடையே மோதல்கள் இருந்து வருகின்றன என்பது உண்மையே.

இருந்தும் பௌத்த ஸ்ரீலங்காவின் புனித பூமியாக இந்தியா உள்ளது.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லாம் நான் நாட்டைப் பிரிக்கும் சிறிய நீரிணையைத் தாண்டி புத்த பெருமானினால் புனிதப்படுத்தப்பட்ட தலங்களைத் தரிசிக்க இந்தியாவுக்குப் பயணம் செய்து வருகின்றேன்.

இந்தியா எம்மைத் தன் அருகே இழுத்துக் கொள்வது இயற்கையே. எமது இனத்தின் தொட்டில் இந்தியா அல்லவா!

வெளிநாட்டுச் சக்தி ஒன்றுக்கு இந்தியாவும் இலங்கையும் அடிமைப்பட்டது. இது எம் இரு வருக்கும் இடையே தடையாக உருவாகியது.

விஜயனின் காலத்தில் இருந்தே சிங்கள மன்னர்களும் பிரபுக்களும் மணப்பெண்களை இந்தியாவில் இருந்தே பெற்று வந்தனர்.

இதை நாம் மறந்து விடுகின்றோம்.

எமது நாட்டு இளவரசிகளை, குறிப்பாக சித்தூர் இளவரசியை இந்திய இளவரசர்கள் துணைவிகளாகத்தேடிக்கொண்டனர்.

இதையும் நாம் மறந்து விடுகின்றோம்.

இன்று துரிதமாக இடம் பெற்றுக்கொண்டு இருக்கும் நிகழ்வுகள் அடிமைத்தனத்தில் இருந்து எம் நாடுகளை விடுவிப்பதுடன் எம் நாடுகளுக்கு இடையேயான தடைக்கல்லையும் அகற்றி விடலாம்.

அவர்கள் விரும்பியது போன்று நாளை இந்தியாவும் இலங்கையும் சுதந்திரம் பெறலாம்.

அதன் பின்னர் நாம் எங்கே செல்வோம் என்பது எமக்குத்தெரியுமா?

சாம்ராஜ்யங்கள் அழிக்கப்படா என்பதையும், சுயாட்சி - டொமினியன் அந்தஸ்து ஆகியவற்றையும் பழைய தலைமுறை நம்புகின்றது.

நாளை இந்தியா சுதந்திரம் பெற்றால் என்ன செய்வது என்பது பழைய தலைமுறைக்குச் சரியாகத் தெரியவில்லை.

நாமே நம்மைப்பார்த்துக் கொள்ளவேண்டிய நிலை.

டொனமூர் அரசமைப்பையும் அதனைப் பாதுகாக்கும் முடிக்குரிய குடியேற்றநாடு என்ற அந்தஸ்தையும் தொடர ஒருவருக்கும் விருப்பமில்லை.

காமன்வெல்த்தில் இருந்து இந்தியா வெளியேறினால் பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள் மத்தியில் டொமினியன் அந்தஸ்து சாத்தியமானதொன்று அல்ல.

ஏனைய உலகநாடுகளில் இருந்து விடுபட்ட சுதந்திர இலங்கை என்பதை நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக உள்ளது.

ஜே. ஆர்.

இந்திய - இலங்கை சமஷ்டி என்பதைப்பற்றி ஆராய வேண்டி ஏற்படலாம். அது பற்றி திட்டமிடப்படலாம். அதை அடைவது உபயோகமாகவும் இருக்கும்.

தற்போதைய முடிக்குரியநாடு, டொமினியன் ஆகிய அந்தஸ்துக்கு 'பெடரேஷன்' என்ற வார்த்தை எதிரிடையாகப் பாவிக்கப்பட்டுள்ளது.

எமது தற்போதைய அரசியல் அபிலாஷைகள் காலத்துக்கு ஏற்றவை அல்ல என்பதை வாசகர் உணரவேண்டும் என்பதற்காகவே அந்த வார்த்தை பாவிக்கப்படுகின்றது.

புதிய நோக்கமும் வெளித் தோற்றமும் இடம் பெறவேண்டும்.

அப்படியான ஒரு 'பெடரேஷனி'ல் இலங்கையின் அந்தஸ்து பற்றி வரையறுப்பதோ, அதன் உரிமைகள், கடப்பாடுகள் பற்றி திட்டவட்டமாகத் தெரிவிப்பதோ சாத்தியமானதல்ல.

சில அத்தியாவசிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் இப்படியான ஓர் அரசியல் யூனியன் எமக்குச் சாதகமாக இருக்கும்.

அவற்றில் முக்கியமானவையாவன:

1. நாட்டின் உள் நாட்டு அரசியல் அமைப்புக் குறித்துத் தீர்மானிக்க, கட்டுப்படுத்தாத உரிமை இலங்கை மக்களுக்கு இருக்க வேண்டும்.

2. உத்தியோக மொழியாக சிங்களம் இருக்கவேண்டும்.

3. இலங்கை சனத்தொகை எப்படி அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை இலங்கை நாடாளுமன்றத்துக்கு இருக்கவேண்டும்.

4. பாதுகாப்புக் குறித்து இந்தியாவும் இலங்கையும் ஓர் அமைப்பாக இருக்கவேண்டும்.

5. இச் சமஷ்டி அரசமைப்பில் இந்திய மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்துக்குச் சரிசமமான அந்தஸ்து இலங்கைக்கு வழங்கப்படவேண்டும்.

மீண்டும் பழைய இலங்கையாக இருப்பது என்பது எமக்குச் சாத்தியப்படாது.

இந்தியாவில் இருந்து படையெடுத்தவர்களை எதிர்த்துப் போராடிய சிங்கள வீரர்களின் தீரச் செயல்கள் துட்டகமுனு, பராக்கிரமபாகு காலஆட்சி ஆகியவை குறித்து எம்மால் கனவு மட்டுமே காணமுடியும்.

இலங்கையையும் அதன்மக்களையும் பெரிய எதிர்காலம் நோக்கியுள்ளது என்பதை என்னால் உணரமுடிகின்றது. இனத்தால் சிங்களவர், தமிழர் என்றிருந்தாலும் பெரிய வலிமை மிக்க இந்தியாவின் பிரசைகளே.

பெரிய சமஷ்டி ஒன்றின் நிழலில் பாதுகாப்பாக இருந்து கொண்டு, எமது இனம் வந்து சேர்ந்த காலம் முதல் நாம் பாதுகாத்து வரும் புத்தரின் போதனைகளை இந்தியாவுக்கும், அதனூடாக உலகுக்கும் நாம் வழங்க முடியும்.

இந்தியாவையும் அதன் மக்களையும் வசீகரிப்பதன் மூலம் வெளி உலகின் பெரும் பகுதியையும் நாம் வசீகரிக்க முடியும்.

சுதந்திர இந்தியாவினால் உலகநாடுகளின் பாதையை மாற்றமுடியுமா? அல்லது இந்தியா மாற்றுமா?

மிக நெருங்கிய இரத்த சம்பந்தமான உறவுள்ள இந்தியாவில் இருந்து நாம் தூர விலகி நிற்க முடியுமா?

(இந்த விஷயம் பெரும்பாலும் கையெழுத்திலானது; கடைசிப் பகுதி டைப்செய்யப்பட்டது. பல திருத்தங்களுக்கும் உள்ளாகின.)

★

- தமிழில்: தீபன்ராஜா

இலங்கைப் பாத்திரங்களுள் வீரத்தில் விஞ்சிநின்றவன்

கும்பகர்ணனா?

இந்திரசித்தனா?

இந்திரசித்தன் கட்சி

பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை:-

இந்திர சித்தனுடைய இயற்பெயர் மேகநாதன். அவன் இந்திரனோடு போரிட்டு வென்றதன் காரணமாகவந்த காரணப்பெயரே இந்திரசித்தன் என்பது. இந்திரசித்தன் என்ற காரணப் பெயரே அவனுடைய வீரத்தை விளக்கி நிற்கும்போது கும்பகர்ணனு இந்திரசித்தனு வீரத்தில் விஞ்சியவன் என்ற விவாதத்திற்கே இடமில்லை. கும்பகர்ணனு மேகநாதனு வீரத்தில் விஞ்சியவன் என்று இருந்தாற் பரவாயில்லை என்று விவாதம் நடத்தலாம். இந்திரசித்தன் என்ற பெயரே அவனுடைய வீரத்தை விளக்கிநிற்கும்போது இந்த விவாதத்தை நடத்துவதே அர்த்தமில்லாத காரியமாகப்படுகிறது.

படைத்தற் கடவுளான பிரம்மனே இவனுடைய வீரத்தை வியக்கிறான். வில்லாற்றல் மிக்கவன். அவன் அனுமனைக் கயிற்றால் கட்டிய பெருமையைக் கம்பன் வியந்து பாடுவான்.

ஆள்வினை சூழ்வினை என்று இரு தகுதிப்பாடுகளையும் உடைய இந்திரசித்தன் ஒரு மான வீரன்.

அனுமனை மாயவினையாட்டினால் மயங்கச்செய்தவன். விபீடணன் காட்டிக்கொடுக்காதுவிட்டால், இந்திரசித்தனைத் தோல்விகாண வைத்திருக்கமுடியாது.

இராவணன் அமைச்சரவையில் ஆலோசிக்கும்போது இந்திரசித்து ''வெற்றி உனக்கே ஆக்குவேன்'' என்றுகூறி போருக்குத் தயாராகினான்.

ஊரெழு இலக்கியவிழாவில் சுவையார் இராமாயண சர்ச்சை

கும்பகர்ணன் போருக்குபோகும்போது ''சாகிறேன் சாகிறேன்,' என்ற நிலையில்தான் சென்றான். இந்திரசித்தனிடமிருந்த உறுதி கும்பகர்ணனிடம் இருக்கவில்லை.

அங்கதன் இந்திரசித்தனின் தலையைக்கொண்டுவரும்போது இராமன் சொல்கிறான் ' இனிநான் தலை எடுத்தேன்'' என்று இங்கு இராமனும் மற்றவர்களும் தலையெடுக்க முடியாதளவு வீரம் மிகுந்திருந்தவன் இந்திரசித்து என்பது தெரிகிறது. இவனின் வீரத்திற்கு இதைவிட வேறுஎன்ன எடுத்துக் காட்டுவேண்டும்?

திரு. க. நாகேஸ்வரன்:-

கும்பகர்ணன் இறக்கப்போகிறேன் என்று தெரிந்துகொண்டே இறந்தான். கொல்லவேண்டும் என்பதுதான் நோக்கமாக இருந்தால் ஒளிந்து

ஊரெழு கண்ட இலக்கிய விழா

★★★

நின்று கொன்றாலும் அங்கே அதர்மமாகப்படாது. தர்மமாகத்தான்படும். ஒரு பிள்ளையைப்பற்றி அப்பிள்ளையின் தாய்க்குத்தான் அதிகம் தெரியும். ''தாளரிச் சதங்கையார்ப்ப.....கம்பன் அழகாகச் சொல்லுகிறான்.

மண்டோதரி புலம்பலில் இந்திரசித்தனின் கீர்த்தி, உயர்வு, பெருமை, வீரம் எல்லாமே சொல்லப்படுகிறது.

மதயானையானது வீரத்தை வெளியே காட்டிப் பிளிறிக்கொண்டு திரிவதால் கும்பகர்ணனை மதயானைக்கும், இந்திரசித்தனைப் புலிக்கும் ஒப்பிடுகிறான் கம்பன், எனவே இந்திரசித்தன் புத்தியுள்ளவன், கீர்த்தியுள்ளவன், சிந்தித்துச் செயலாற்றுபவன், அறிவினால் அடங்கிநடப்பவன்,

வீரம் புராவிசயம் மட்டுமல்ல, அக்விசயமும்கூட. உள்ளத்திலே ஒருவனுக்கு மனத்திண்மை இருக்கும் என்றால் அந்த மனத்திண்மையினாலேயே தான் அடையவேண்டியதை - தான் நினைத்ததை எய்துகிற காரியம்தான் வீரம் என்று தமிழ் இலக்கியங்களில் சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றால் அது இந்திரசித்தனுக்கே பொருந்தும்.

திரு. தி. திருநந்தகுமார்:-

சாதாரண ஒரு தாய் தன் பிள்ளையைப் புகழ்வது புகழ்ச்சியாக இருக்கும். ஆனால் மண்டோதரியோ இராமாயணத்தில் எந்தக் காலத்திலும் வாயைத் திறக்காதவன். கணவன் இறந்துவிட்டான் என்றபோது, அவன் உடலின்மேல் விழுந்து புலம்பியழுது தன்னுயிரை விட்டவள். கணவன்

- தொகுப்பு:- அ. கனகசூரியர் -

மீதுள்ள அன்பு இதிலிருந்து தெரிகிறதல்லவா?— இந்திரசித்து இறந்து கிடந்தபொழுது அவ்வாறான நிலைஏற்படவில்லை. இவளின் அழிவு, இராவணனின் அழிவுக்குக் கட்டியம் கூறுவதுபோல அமைந்திருந்தது.

அனுமன் இலங்கைக்கு வந்து சீதையைக்கண்டு அசோகவனத்தை அழித்து குழப்பம் விளைவித்தபொழுது அரக்கர்கள் வந்து அனுமனைக் கட்டுப்படுத்தமுடியாத நேரத்திலே, இந்திரசித்தன் ஒருவனே அனுமனை இராவணன் முன்கொண்டுவந்து நிறுத்தினான் என்றால் அது இந்திரசித்தனின் வீரத்தைக் காட்டுகிறதல்லவா?

அண்ணனுக்கு எதிராக இராமன் போர்தொடுத்துவிட்டான் என்பதை அறியாதவனாகத் தூக்கத்திலிருந்தவன் கும்பகர்ணன். தட்டி எழுப்பியதும் சண்டை தொடங்கிவிட்டதா? என்றானும் வீரம் இருக்கிறவன் வீழ்ந்து படுத்திருக்கமாட்டான். இவனது வீரத்தைக் குறைகூறவில்லை. ஆனால் இந்திரசித்தனுடன் ஒப்பிடும்பொழுது இவனுடைய வீரம் குறைவுபடுகிறது. இந்திரசித்தன் கண்ணுறக்கம்கொள்ளாதிருந்தவன். வீரம் என்பது செயற்பாட்டில் இருப்பது. இந்திரனுடைய செயல் திறமையிலிருந்து அதனை அறியமுடிகிறது.

கும்பகர்ணன் கட்சி

புலவர் ஈழத்துச் சிவானந்தன்:-

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்.

எனக் கம்பர் கூறுவதுபோன்று இராவணனின் வீரம் விழுந்துவிட்ட நிலையில் அவனின் வீரத்தினை - வெற்றியினைத் தூக்கிநிறுத்தும் பொறுப்பு கும்பகர்ணனுக்கும் இந்திரசித்தனுக்கும் உரியதாகிறது. இதில் யார் இராவணனைத் தூக்கி நிறுத்தினார்கள் என்பதே இங்கு முக்கியமானது.

கும்பகர்ணன் போருக்கு உற்சாகமற்ற நிலையிற் சென்று உற்சாகமாகப் போராடியமை இங்கு கவனிக்கப்படவேண்டியது. நித்திரையில் இருந்து எழுந்த கும்பகர்ணன் ''அண்ணன் இன்னும் சீதையை விடவில்லையோ?'' என்று உற்சாகக்குறைவோடு கேட்கிறான் இந்நிலையில் ''நீ சாப்பிட்டு விட்டுத்தூங்கு, உனக்கு அதுதானே வேலை'' என்ற இராவணனின் கூற்று அவனை மேலும் உற்சாகம் குன்றவைக்கிறது. இத்தகையநிலையில் போர்க்களம் சென்று உற்சாகத்துடன் போரிட்டானே அதுதான் உண்மையான வீரம். இன்றையபோராளிகளுக்கு அப்பன் ஆனவன் இந்தக் கும்பகர்ணன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

அரச குருவின் நயவஞ்சகம்

காளி தேவியிடம் ஒரு நகைச்சுவை புரிபவனாக விகடகவியாக வரம் பெற்ற பிறகு தெனாலி ராமன் தனது எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்தான்.

அந்தச் சமயத்தில் அவனுடைய மனைவி கமலா ஓர்ஆண்மகனைப் பெற்றெடுத்தாள்.

குடும்பம் நடத்துவது கஷ்டமாக இருந்தது. நிரந்தர வருமானம் இல்லை. பசியும் பட்டினியுமாக வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது.

அப்போது விஜய நகர மன்னராக கிருஷ்ண தேவராயர் செங்கோல் செலுத்தி வந்தார்.

கிருஷ்ண தேவராயர் கலை பல கற்றவர். கலைகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். கலைஞர்களை மதித்து அவர்களுக்குப் பரிசளித்து மகிழ்பவர்.

எப்படியாவது கிருஷ்ண தேவராயரது கருணையைப் பெற்றுவிட்டால் நிச்சயமாக நிரந்தரமான உயர்வாழ்க்கை அமையும் என்று தெனாலி ராமன் நம்பினான்.

கிருஷ்ண தேவராயரை நேரடியாக சந்திப்பது சடினமாக இருக்கும். யாராவது தக்க ஒருவரது பரிந்துரை இருந்தால் சுலபமாக மன்னரைச்சந்தித்து விட முடியும்.

அந்தச் சமயத்தில் கிருஷ்ண தேவராயர் சபையில் அரச குருவாக இருந்த தாத்தாச்சாரியார் என்பவருக்கு மன்னரிடம் அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் இருந்தது.

அரச குரு பரிந்துரை செய்தால் தனக்கு அரசவை விகடகவி பதவி கிடைக்கும் என்று தெனாலிராமன் கருதினான்.

ஒரு தடவை அரச குரு தாத்தாச்சாரியார் தெனாலிக்கு அருகமையிலிருந்த மங்களகிரி என்ற பேரூருக்கு வருகை தந்திருந்தார்.

மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று அரச குருவை வணங்கி அவருடைய ஆசியைப் பெற்றுத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

தெனாலிராமன் தான் எழுதி வைத்திருந்த காப்பியங்கள் சிலவற்றை எடுத்துச்சென்று அரச குருவை வணங்கி அவருக்குப் படித்துக் காண்பித்தான்.

உண்மையிலேயே நல்ல நகைச்சுவை இலக்கியங்களாகத் திகழ்ந்த அந்த காப்பியங்களை அரச குரு நன்கு ரசித்துக் கேட்டார்.

அவற்றைப் பாராட்டினார். தெனாலிராமனுடைய அறிவாற்றலைப் புகழ்ந்து பேசினார்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசவையில் தனக்கு விகடகவி பதவி கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு தெனாலிராமன் அவரை வேண்டிக் கொண்டான்.

இவ்வாறு அவன் அரசபதவியை விரும்புவான் என்று அரசகுரு எதிர்பார்க்கவில்லை.

தெனாலிராமன் அங்கு வந்து சேர்ந்தால் தன்னுடைய அறிவாற்றலால் மன்னரைக் கவர்ந்து அவர் மனத்தில் உயர்ந்த மதிப்பைப் பெற்று விடுவான். அப்புறம் தன்னுடைய செல்வாக்குக் குறைந்து விடும் என்று அவர் அஞ்சினார்.

என்றாலும் தம்முடைய மனக்குழப்பத்தை அடக்கிக் கொண்டு ''தெனாலிராமா உன்னைப்போன்ற திறமைசாலியை அரச சபையில் கொண்டு போய்ச் சேர்ப்பது நமது அரசருக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பதாகவே இருக்கும் அதனால் மன்னரிடம் உன்னைப் பற்றிப் பரிந்துரை கூறி நிச்சயம் அரசவையில் உனக்கு இடம் பிடித்துத் தருகிறேன். விஜய நகரம் சென்றதும் உனக்கு ஆள் அனுப்புகிறேன். உடனே வந்து சேர்''என வஞ்சகமாக மொழிந்தார்.

அரச குருவின் சொற்களை உண்மை என நம்பிய தெனாலிராமன் அவர் மங்களகிரியில் தங்கியிருந்த காலம் வரை இவர் மனமகிழக் குற்றேவல் புரிந்தான்.

பிறகு அரசகுரு புறப்பட்டு விஜயநகரம் சென்று விட்டார்.

(தொடரும்)

தயாரிப்பு:-
'ஸ்ரீ'

விடுகதை விடுவோம்

1. செம்பு நிறைய சிவத்த முத்து தம்பி கையில் எடுக்கும் முத்து அது என்ன?
2. பந்தலிலே பாம்பு பறந்தாடுது பார். கடிக்காது சீறுது கைபட்டால் வளராது. அது என்ன'
3 விரித்த பாய் மீது வெள்ளிக்குடம். அடுத்தடுத்து நாள்தோறும் அழியும்குடம்.

விடை

1. மாதுளம்பழம்
2. புடோலங்காய்
3. சந்திரன்

—நிதர்ஸன்

சிறுவர் கூடம்

முயன்று பாருங்கள்



இடமிருந்து வலம்

1. சக்தி விரதம்
2. இரவு
4. விளக்கேற்ற இது தேவை
5. பழரசத்திலிருந்து தயாரிப்பது
6. கடல்
9. முருகனின் சக்திகளில் இதுவும் ஒன்று
10. இதனுடன் 'லை' சேர்ந்தால் சிவன் இருக்கும் இடம்
11. காப்பாற்று

மேலிருந்து கீழ்

1. ஒன்பது சக்தி இது
2. மகாராணியார்
3. ஜோதிடம்
6. இது இல்லாமல் இயக்கம் இல்லை
7. முயலை இப்படியும் கூறுவர்
8. துன்பம்

கடந்த வாரம் (12. 9. 87) சஞ்சீவியில் வெளியான ''முயன்று பாருங்கள்'' பகுதிக்கான விடைகள்.

இடமிருந்து வலம்

1. பூண்டுலோயா
4. காப்பவன்
7. சிவபாலன்
10. ஓம்

மேலிருந்து கீழ்

1. பூங்காவனம்
2. பொன்வண்டு
3. யாழ்ப்பாணம்
6. பலன்
7. வனம்
8. பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகுந்தல காவிய உருவாக்கத்தால் ஈழத்து இலக்கியத்துக்குச் சிறப்பு

திரு. க. உமாமகேஸ்வரன்

பிறமொழி இலக்கியமொன்றை ஒருவர் படிக்கிறார்; ரஸிக்கிறார்; அதைத் தமது மொழியில் படைக்கவேண்டுமென்று விரும்புகிறார். அப்படியே படைத்து விட்டால் அது அதர்ப்படயாத்தல் என்ற பிரிவில் அடங்கிவிடும்.

ஒரு நூலைப் படித்த அருட்டுணர்வால் (Ins--piration) படைப்பதென்பது மற்றொரு வகை. மாப்பஸாவின் 'அட்டிகை' கதையைப் படித்துவிட்டுச் சோமசெற்மாம் 'எல்லாம் அறிந்தவன்' கதையைப் படைத்தது அப்படித்தான். ஏன் நசிகேதனின் கதையைப் படித்துவிட்டுப் புதுமைப் பித்தன் நீட்ட முயன்ற ஓவியந்தானே அவரது 'மலக்குகை ஓவியங்களில்' ஐந்தாவதான ஓவியம்.

ரிஷ்ய சிருங்கர் கதையைத் தாகூரும் படித்தார். கம்பரும் படித்தார். கம்பர் படைத்த விதம் வேறு. முனிவரை அழைத்துவர முடியாத கணிகை, மன்னன் காலில் வீழ்ந்து தன் தோல் விக்காற்றாது அழுது அரற்றுவதாகத் தாகூரின் படைப்பு நிறைவுறுகிறது. இது பிறிதொரு விதம்.

தாகூர் வழியிலே தமக்குத் தோன்றிய மாற்றங்களைப் புகுத்திச் சம்பந்தன் சாகுந்தல காவியத்தைப் பாடியிருக்கிறார்.

உரைக் குறிப்புகளைத் தாமே எழுதிவிடச் சம்பந்தன் துணிந்ததேன்? மூன்று முக்கிய காரணங்களுக்காகவே அவர் அப்படித் துணிந்திருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகின்றது.

''தனக்குவமையில்லாதான்'' என்ற குறளிலே 'அரிது' என்ற சொல் வருகிறது. சாதாரண வழக்கிலே தரும் பொருளை இச்சொல் அங்கே தரவில்லை. 'இல்லை' என்ற பொருளையே அங்கே தருகின்றது. இல்லையென்ற பொருளைத் தராவிட்டால் இறைவனது தாளைச் சேராதவர்க்கும் மனக்கவலையை மாற்றுவதென்பது இயலக்கூடியது ஒன்றுதான் எனப் பொருள் கொள்ள நேர்ந்து விடும். இப்படித் தமது காவியத்திற் பொருள் கொள்ள நேர்ந்து விடக் கூடிய இடங்களைத் தெளிவுபடுத்தித் தமது கருத்து இதுதான் என வலியுறுத்திச் சம்பந்தன் உரைக்குறிப்பை எழுதியிருக்கிறார்.

''தக்கார் தகவிலர்'' என்ற குறளிலே வரும் 'எச்சம்' என்ற சொல்லுக்குப் 'புகழ்' எனப் பொருள் கண்டிருக்கிறார் பேராசிரியர் மு. வ. புகழ் என்ற அதிகாரத்தில், 'எச்சம்' என அடை புணர்த்தாது வெறுமனே சொன்னாற் 'புகழ்' என்ற பொருள் பெறப்படுமாயின், 'இசையென்னும் எச்சம்' என வள்ளுவன் அடை புணர்த்திக் கூறியிருக்க மாட்டான். எனவே அடை புணர்த்தாத போது 'எச்சம்' என்ற சொல்தரும் பொருள் புகழ் அன்று; வேறு என்பதுதெளிவு. தமது காவியத்துக்கு உரை எழுதப் புகுந்து பிறர் இத்தகைய இடர்பாடுகளை ஏற்படுத்தாதபடி அரண் செய்வதற்காகவும் சம்பந்தன் உரைக்குறிப்புக்களை எழுதியிருக்கிறார்.

திருவாசகத்திற் 'கோதிலா அமுதே' என்ற தொடர் வருகிறது. அமுதிற் குற்றம் உடைய அமுது குற்றம் இல்லா அமுது என உண்டா? கோதிலா என்ற வினை அடையேன்?

விண்ணோர் அமுதுண்டும் சாகிறார்கள். சாவைத் தடுக்கும் ஆற்றல் அமுதுக்கு இல்லை. இந்த அமுது கோதுடைய - குற்றமுடைய - அமுது. இறைவனோ பிறவாமையாகிய மரணமிலாப் பெருவாழ்வை நல்குபவன். எனவே அவன் கோதிலா அமுது' ஆகின்றான். பழைய இத்தகைய நுட்ப விளக்கங்கள் போன்று, தமது காவியத்திலே வரும் தொடர்களுக்கு நுட்ப விளக்கங்கள் தருவதற்காகவும் உரைக்குறிப்பைச் சம்பந்தன் எழுதியுள்ளார்.

'கல்யாணர்' என்ற சொல்லுக்குப் 'புதுப் பொருள் காண்பவன்' என உரை எழுதும் சம்பந்தன் தமது காவியத்துக்குப் புதுப்பொருள் காவியத்தின் நடை எடுத்துக்கொண்ட பொருளின் உயர்வுக்கேற்ற உயர்ந்த நடையாக அமைந்து விட்டதில் வியப்பில்லை. படிப்பவர்கள் தம்மைத் தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

பேராசிரியர்
கா. சிவத்தம்பி

சம்பந்தன் அவர்கள் சிறந்த சிறுகதை ஆசிரியர். சிறுகதை வரலாற்றில் அவருக்கு இடம் உண்டு. ஆயின் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிப் பாரம்பரியத்தில் அவருக்கு மிக முக்கிய இடம் உண்டு.

சம்பவங்களைச் சித்தரிப்பதிலும் பார்க்கச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட உணர்வுகளைச் சித்தரிக்கும் பண்பே அவரிடம்

இலக்கியக் கடல்களில் சிந்திடும் முத்துக்கள்

துலக்கித் தாமே 'கல்யாணர்' ஆகவும் விளங்குகிறார்.

தனக்குத் தெரியாததைப் பிறருக்குப் புரியாத விதத்திற் சொன்னால் அது தத்துவம்' என வோல்ரெயர் சொன்னதுண்டு. புரிந்துகொள்வதற்கும் புரிந்துகொள்ளவைப்பதற்கும் மிகுந்த சிரமம் தரும் பண்டம் தத்துவம் என்பதற்காகவே அவர் அப்படிச் சொன்னார். தத்துவப் பேராசிரியர் இவிங் 'தத்துவத்தைக் கற்க வருவோர் நாவல் வாசிக்க வருவதாக எண்ணிவரக்கூடாது. தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும், என எச்சரித்ததும் நினைவுக்கு வருகிறது. எனவே வேதாந்த தத்துவத்தை உட்பொருளாகக் காண்ட சாகுந்தல மிகுந்து நிற்கிறது. அவர் அக நோக்கு உடையவர். நுண்ணுணர்வு உடைய படைப்பாளி.

சிறுகதையிலிருந்து அவர் கவிதைக்குச் சென்றிருக்கிறார். சிறுகதையிலிருந்து நாவலுக்குச் செல்வது இயல்பான வழக்கம். இவரோ சிறுகதையிலிருந்து கவிதைக்குச் சென்றிருக்கிறார். சிறுகதையிலிருந்து கவிதைக்குச் செல்வதற்கு பிச்சமூர்த்தி கு. ப. ரா போன்றோரும் நல்ல உதாரணங்களாக அமைவர். அவர்களே புதுக் கவிதை தோன்றுவதற்கும்காரணகர்த்தாக்கள்.

சம்பந்தன் அவர்கள் கவிதைப் பண்பைத் தமிழிலிருந்து மாத்திரம் அல்லாது அனைத்திந்திய மொழிகளிலும் இருந்து பெறுகிறார்.

பாரதி மகா பாரதத்திலிருந்து பாஞ்சாலி சபதத்தைப் பெற்றான். பாரதிதாசன் மணிமேகலை, சிலப்பதிகாரம் என்பவற்றில் இருந்து புதிய மணிமேகலையும் சிலப்பதிகாரமும் ஆக்கினார்.

கம்பராமாயணத்தில் பாத்திரங்கள் செல்வாக்குப் பெறுகின்றன. கம்பன் பாத்திரங்களுக்குச் செல்வாக்குக் கொடுக்கிறான். பெரிய புராணம் ஒரு கதை சொல்லும் பாங்கில் அமைந்தது. பாத்திரங்களின் ஆளுமையைவிடச் சேக்கிழாரின் ஆளுமையே அதிகம். அவ்வாறே சம்பந்தன் அவர்களின் சாகுந்தலமும் அமைகிறது.

சம்பந்தனே கதை சொல்வதாகக் காவியப் அமைந்துள்ளது.

மூல நூலில் இல்லாத மதநோக்கம் இந்த நூலில் இருக்கிறது. தமிழிலக்கியங்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

சம்பந்தன் அவர்கள் பண்பாட்டின் பிரதிநிதியாக விளங்குகிறார்.

காவியத்தின் மொழி நடை கடினமாக இருப்பது ஒரு குறைபாடாக எனக்குத் தோன்றுகிறது. வாழும் மொழியில் எழுதுவதே எப்போதும் சிறந்தது. வாழும் மொழி என்பது பேச்சு மொழி அல்ல. சாதாரண மக்களுக்கும் விளங்கக் கூடிய இலக்கணத்தோடு கூடிய மொழியில் இலக்கியத்தை யாப்பதே சிறந்தது.

கவிஞர்
இ. முருகையன்

சாகுந்தலத்தை நாடகமாக எழுதினான் காளிதாசன். சம்பந்தன் அவர்கள் அதனைக் காவியமாக வடித்திருக்கிறார்.

காளிதாசனுடைய சாகுந்தலப் பேச்சு மொழியிலான வசனங்களும் பாட்டுக்களும் கொண்டது. இக்காவியம் செவ்விய வசனங்களையும் செவ்விய பாட்டுக்களையும் கொண்டது.

காளிதாசனுடைய சாகுந்தலம் பருமையும் நுண்மையும் செம்பாதியாக அமையப்பெற்றது. சம்பந்தன் அவர்களுடைய காவியம் பருமையை விட நுண்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பது. தத்துவங்கள் விரவப் பெற்றது. காளிதாசன் சம்பந்தன் இருவருடைய சாகுந்தலங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் இவை.

கலாநிதி
கோபாலகிருஷ்ணன்

கடினமான தத்துவங்கள் எளிமையான நடையில் காவிய வடிவில் சுவைபடத் தரப்பட்டுள்ளதே சாகுந்தல காவியம். கந்தபுராணம் போன்ற நூல்களின் வழியிலே தத்துவங்களுக்கு உருவகமாக இக்கதை அமைகிறது. சகுந்தலைக்குக் கண்ணுவ முனிவர் செய்த உபதேசங்கள் பகவத்கீதையை ஞாபகப் படுத்துவன. சம்பந்தன் அவர்கள் பரமபொருட் கோட்பாட்டைத் திறம்படத் தந்திருக்கிறார்.

செல்வி. தங்கம்மா
அப்பாக்குட்டி

பெண்கள் படிக்கக் கூடாது பெண்களுக்கு உபதேசம் செய்யக் கூடாது என்ற கருத்துக்கள் எங்கள் சமுதாயத்திலே நிலவியது. ஆனால் சம்பந்தன் ஐயாவுடைய சாகுந்தல காவியத்தில் பெண்மை போற்றப்படுகின்றது கண்ணுவர் சகுந்தலைக்குச்செய்த உபதேசம் சிறந்த பேரின்ப உபதேசம்.

இக்காவியத்தில் நூலாசிரியர் கணபதி, தமிழ்நாட்டுப் பாரதியான் என்று எல்லோராலும் பேணப்படுகிறது.

யமுனை நாட்டையே ஒரு குல மகளாக வருணிக்கிறார் ஆசிரியர். மேனகையைக் கூடத் தவமகளாகக் காட்டுகிறார்.

புத்தொளி

புத்தகம் எழுதுகிறவர்கள் அதற்கென்று பிறக்கின்றார்கள். எழுத வந்து எழுதுகிறார்கள். எழுதாமல் இருக்க முடியாமல் எழுதுகிறார்கள். புத்தகம் ஒன்று எழுதித்தான் தீர

சாகுந்தல காவிய நூல் வெளியீட்டு விழாத் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.

வேண்டுமென்று அவர் எழுதுவதில்லை.

பாரத நாட்டுக் கற்பக தருக்களாக விளங்கும் அன்றைய கதைகள் அரசிளங்குமாரர்கள், அரசகுமாரிகள், முனிவர்கள் தொடர்புடையனவாக இருக்கின்றன. இன்றோ அரசர்களின் ஆட்சியில்லை; இராசகுமாரர்களுமில்லை; முனிவர்களும் நம்மிடையே காணப்படவில்லை. அப்படியிருந்தும் அந்தக் காலத்து இலக்கியங்கள், கதைகள் நம்மிடையே வரவேற்புப் பெற்று வருகின்றன என்றால் அவற்றின் தெய்வீகத் தன்மை தான் காரணமாகும்.

அக்காலத்தில் பாரத நாட்டுப் பண்பாட்டுக் கதைகளில் - பாரதக் கதையில் சொல்லப்பட்ட கதை சாகுந்தலம் கதை.

விக்கிரமாதித்தன் பலவித்துவான்களை ஆதரித்து வந்தான். அவனது சமஸ்தானத்தில் நவகவி இரத்தினங்கள் என்ற ஒன்பது சமஸ்கிருத பண்டிதர்கள் இருந்தார்கள். அவர்களில் தலைசிறந்த கவிஞராகக் காளிதாஸர் விளங்கினார். அவர் பதினெட்டுக்கு மேற்பட்ட நூல்களையும் எமக்குத் தந்திருக்கிறார். அவைகளில் மூன்று நாடகங்கள் மும்மணிகளாக மிளிர்கின்றன.

காளிதாஸரைக் காலத்தால் சாகாத கவிஞராக உலகத்திற்குக் காட்டி நிற்பது அவரது அற்புத சிருஷ்டி சாகுந்தலமாகும்.

இலக்கியங்களுக்குள் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியது நாடகம். நாடகத்தில் தலை சிறந்தது சாகுந்தலம், என ஒரு பாட்டு சமஸ்கிருதத்தில் காணப்படுகின்றது.

'என் வாழ்நாளில் எனக்கு வாய்த்த அனுபவங்களில் மேலானதாகச் சாகுந்தலம் படித்த இன்பம் இருக்கின்றது' என்று கவிஞர் கே. தே குறிப்பிட்டுள்ளார்.

வங்கம் தந்த தங்கக் கவிஞர் தாகூர் சாகுந்தல காவியம் பற்றிப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

சாகுந்தலம் தன்னகத்தே ஒரு உண்மைக் கருத்தை உடையதாக இருக்கின்றது. சாகுந்தலம் ஒரு அற்புத அழகு நாடகம். பண்பட்ட சரித்திரத்தின் கருவூலம். பூவிலிருந்து பழத்தை அறிந்து சுவைக்க வல்லது. பூமியிலிருந்து சொர்க்கத்தைக் காண வல்லது. மனித வாழ்விலிருந்து அமரத்துவத்தை அடையவல்லது. இதன் கருப் பொருள், இதன் அழகிய நடை, உலக காதல் பந்தத்தின் முதற் சேர்க்கையைக் கூறுவது. சாகவதமானது. மகிழ்ச்சியின் பிறப்பிடம் அந்த நாடகம்.

பாரத நாட்டுக் காளிதாஸரை மேற்கத்தியர் (Sir William Jones) வியப்பு தோன்ஸ் என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நாக்கின் கதை

கண் பார்க்கின்றது. காது கேட்கின்றது. மூக்கு மணக்கின்றது. மெய், பரிசத்தால் வன்மையானதோ மென்மையானதோ என உணர்கின்றது. நாக்கு சுவைக்கின்றது. இவை ஐந்தும் இந்திரியங்கள் எனப்படுகின்றன. இவைகளே ஐம்பொறிகள். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணியினைச் செய்து கொண்டிருக்கின்றன. இவை அவ்வப் பணிகளைத் தான் செய்யத்தக்க வன்மை படைத்தவை. கண் கேட்கமாட்டாது, மணக்கமாட்டாது. காதுபார்க்கமாட்டாது, மணக்கமாட்டாது. சுவைக்கமாட்டாது. பரிசத்தால் உணர்ந்து வன்மையானதோ மென்மையானதோ எனக் கூறவும் மாட்டாது. நாக்கின் தன்மை அப்படிப்பட்டதன்று. அது, ஒரு பணியினையன்று, இரண்டு பணிகளைச் செய்யவல்லது.

நாக்கினுக்கெனக் கடவுள் விதித்துப்படைத்த இரு பணிகளுமே பெரும் பணிகள். நாக்குப் புரிந்து வரும் முதலாவது பணியாகிய சுவைத்தல் பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். ஒரு பொருள் கூடாத சுவை உடையதாயிருந்தால் அதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். அதனால், அதை உண்ணவும் மாட்டீர்கள். ஆனால், நீங்கள் உடல் நலம் குன்றியிருக்கும் போது, மருந்து குடிக்கின்றீர்கள். நாக்கு, சுவைத்துப் பார்த்துக் கூடாத சுவை என்று கூறினாலும், அதை நீங்கள் குடித்தே தீரவேண்டும். எனவே, கசப்பாய் இருக்கும் பொருள்கள் எல்லாவற்றையும் நீங்கள் துப்பி விடுதலாகாது. அவற்றுள்ளே சில, உங்கள் நோய் பிணிகளை விரைவாகவும் செம்மையாகவும் மாற்றிக்கொள்ள உதவுகின்றன.

இன்னும் ஒரு உண்மையையும் நீங்கள் நினைவு கூருதல் வேண்டும். நல்ல சுவையுடைய ஒரு பொருள் உங்கள் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிப்பதாகவும் இருக்கலாம். ஒரு பொருள் கசக்கின்றதோ, இனிக்கின்றதோ, உவர்க்கின்றதோ என நாக்கு உங்களுக்குச் சொல்லும். அப்பொருள் உங்களுக்கு நல்லதோ கூடாததோ என அது உங்களுக்குச் சொல்லமாட்டாது. எனவே, நீங்கள் கவனமாக இருந்து, அதிலே மிகுதியாக உண்டு உடல் நலத்தினைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. உங்கள் உடல்நலம் கெட்டிருக்கும்போது மனமும் பலவீனமுற்றிடும். மூளையும் செவ்வையாகப் பணியாற்றமாட்டாது. ★

பெண் குழந்தைகளை ஆண்குழந்தைகள் போன்று வளர்க்க முடியுமா?

நம் நாட்டைப் பொறுத்தவரை பெண் குழந்தைகளைப் பெண்குழந்தையாகவே இதுவரை வளர்த்துவந்தனர்.

எடுத்ததற்கெல்லாம் 'நீ பெண் குழந்தை, நீ பெண்குழந்தை' என்று அவளுக்கு, அவள் பெண் என்பதை நினைவுறுத்தி, பலவிதங்களிலும் ஒரு பெண்ணின் வளர்ச்சியை நாம் தடைசெய்து வந்துள்ளோம். அதற்காகப் பெண்ணை முழுவதும் அப்படியே ஓர் ஆணைப்போல வளர்க்கவேண்டும் என்றும் நாம் சொல்லவில்லை.

இப்போது காலம் மாறிவிட்டது. எனவே அதற்கேற்றாற்போன்று நாமும் நம்மை மாற்றிக்கொள்வதுதான் சிறந்தது.

நம்நாட்டில் 'தைரியமாக வளர்க்கிறேன் பேர்வழி' என்று முழுக்க முழுக்க ஆண்பிள்ளைகளைப்போல் பெண் குழந்தைகளை வளர்த்துவிட்டு, பின்னால் அவதியுறும் பெற்றோர்களைப் பார்க்கின்றோம்.

அதேபோன்று முற்றிலும் பெண்குழந்தைகளைப் பெண்குழந்தையாகவே வளர்த்துவிட்டுப் பெருமூச்சுவிடும் பெற்றோர்களையும் பார்க்கின்றோம்.

முற்றிலும் ஆண்குழந்தையைப்போன்று வளர்க்கப்பட்ட பெண், தான் ஒரு பெண் என்பதையே மறந்துவிடுகிறாள்.

அதேபோல பெண்குழந்தை என்று பெண் குழந்தையாகவே வளர்க்கப்பட்ட பெண்ணும், எதிர்காலத்தில் தனியே நின்று நிலைமைகளை சமாளிக்கமுடியாமல் தத்தளிக்கிறாள்.

'பெண் குழந்தைகளை ஆண்குழந்தைகள்போல் வளர்க்கலாமா?'—எனும் கேள்வி கொஞ்சம் சிக்கலானது.

பெண்குழந்தைகளை ஆண்குழந்தைகள்போல் வளர்க்கலாம் என்றும் கூறமுடியாது. வளர்க்கக்கூடாது என்றும் சொல்லமுடியாது.

பெண்கள் தோற்றம், உடற்கூறு, மனோநிலை இவைகளால் ஆண்களிடமிருந்து வித்தியாசப்படுகின்றனர்.

முன்பெல்லாம் நம்நாட்டில் பெண்குழந்தைகளை ஆண்குழந்தைகளிலிருந்து மாறுபட்டநிலையில் மிகவும் வித்தியாசமாக வளர்த்தனர். இன்னும் சொல்லப்போனால் குழந்தையிலிருந்தே, பிறக்கும்போதே அவர்கள் வித்தியாசப்படுத்தப்பட்டனர். ஏன், இன்றும்கூட இந்த வித்தியாசம் பெரிதாகப் பாராட்டப்படுகிறது.

ஆமாம்... ஆண்குழந்தை வேண்டும் என்று நினைக்கின்ற பெற்றோர்கள் தான் அதிகம்.

இப்போதைய அறிவுபூர்வமான உலகத்தில் கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறியமுடிவதால், சோதனை மூலம் 'பெண் குழந்தை, என்று தெரிந்துகொண்டால் கருச்சிதைவு செய்துகொள்கிறார்கள்.

ஆண்குழந்தைகள் பெண்குழந்தைகளைவிட உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் இப்போதும் பலரிடையே இருப்பது வியப்பே.

என்னைப்பொறுத்தவரை ஆண்தான் உயர்ந்தவன் அல்லது பெண்தான் உயர்ந்தவள் என்ற பேதம் கிடையாது. யாரும் யாரையும்விட உயர்ந்தவர்கள் கிடையாது.

ஒவ்வொருவரும் ஆற்றக்கூடிய சிறந்தபணிகள் உள்ளன. அதுவும் இந்த நவநாகரிக உலகத்தில் மிகவும் சுவையான பணிகள் உள்ளன.

தற்போது நிறைய சமயங்களில் பெண்ணே குடும்பப்பொறுப்பு முழுவதையும் சுமக்கவேண்டியவளாகின்றாள்.

கூட்டுக்குடும்ப முறைகள் தற்போது குறைந்துகொண்டுவருகின்றன.

கணவன் திடீரென்று இறந்துவிட்டால் மனைவியேயணைத்தாலும், மனத்தாலும் குடும்பத்தை ஈடுபட்டவேண்டியுள்ளது. ஏனெனில் கணவன் இறந்த பிறகு அவள் பழையபடி தன் பிறந்த வீட்டுக்குப்போக முடியாது. இதற்குக்

காரணம் உடைக்கப்பட்ட கூட்டுக்குடும்பமுறைகள்.

பையன்களும் 'திருமணமானதும் தனியாகப்போய் விடுவதால், பெற்றோர்கள்பாடே திண்டாட்டமாக உள்ளதால் இதில் எங்கே பெண்ணையும் காப்பாற்றமுடியும்?'

நிறையபெண்கள் வரதட்சணை, விவாகரத்து என்று திருப்பி அனுப்பப்படுகின்ற நிலையில், பெண்கள் மற்றவர்களைச் சார்ந்துநிற்பது சரியல்ல சார்ந்து நிற்கவும் முடியாது.

தனியொரு குடும்பத்திலும் தந்தை மட்டுமே சம்பாதித்தால் போதாது. பையன்களும் பொறுப்பற்றவர்களாக இருப்பதால் நிறைய சமயங்களில் பெண்கள் வேலைக்குச்சென்று குடும்பச் செலவுகளை ஈடுகட்டுவதைப் பார்க்கின்றோம்.

திருமணமான இளம் தம்பதிகள் வாழ்க்கையில் முதன்முதலில் அடி எடுத்துவைக்கும்போது நிறைய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஓர் அளவிற்கு தரமான வாழ்க்கை வாழவேண்டும் என்று நினைக்கின்ற நிலையில் இருவருமே வேலைக்குச் செல்லவேண்டியதாகிறது.

பையனுக்கு விளையாடுவதற்கு துப்பாக்கி, கார், ஏரோப்பிளேன் என்று கொடுக்கும் நாம் பெண்ணுக்கு பொம்மைகள், ஸ்கிப்பிங், சமையல் செய்யும் சிறு சொப்புகள் என்று கொடுத்து அவள் பெண் என்பதை உணர்த்துவதுடன் எதிர்காலத்தில் குடும்பத்தில் அவள் பொறுப்பு என்ன என்பதைப் பற்றி, மறைமுகமாக இதன் மூலம் வலியுறுத்திச் சொல்கிறோம்.

வேலை, திருமண வாழ்க்கையில் பங்கு. பெற்றோராக இருந்து குழந்தைகளுக்குச் செய்யும் கடமைகள் என்று பெண்ணும் ஆணைப் போலவே இப்போதைய உலகத்துக்கேற்றவாறு செயற்படவேண்டியுள்ளது.

வேலை என்று பார்க்கும்போது அதிகமான போட்டியை சந்திக்கவேண்டி உள்ளது. அதுவும் குறிப்பாக டாக்டர், ஆசிரியர் மற்றும் பொதுப்பணிகளுக்கு ஆண்களுடன் சரிசமமாக அவள் போட்டியைச் சந்திக்கவேண்டியுள்ளது.

இப்படி போராடி ஒரு வேலையைப் பெற்றபின்பு தன்னை ஒத்த ஆண் தொழிலாளர்களைப் போலவே சமமான பொறுப்பை ஏற்கவேண்டியவளாகிறாள் ஒருபெண்.

முன்பு எல்லாம் சமையல் செய்வது, கணவனுக்கு சூடாகப் பரிமாறுவது, துணிகளைத் துவைப்பது-ஏன் சிலசமயங்களில் செருப்பைக்கூட கால்களில் மாட்டுவது என்று மொத்தமாக எவ்வளவு பணிவிடைசெய்து பணிவாக இருக்க முடியுமோ, அவ்வளவு பணிவாக இருக்கும்படியே பெண்களின் சமூக அமைப்பு இருந்தது.

ஆனால் இப்போது ஆண்களே, பெண்கள் வீட்டிலும் வெளியிலும் பொறுப்பு ஏற்று பணிசெய்வதை உணர்ந்துகொண்டுள்ளார்கள்.

பெற்றோர் கடமை அல்லது பொறுப்பு என்று பார்க்கும்போது தாய், தந்தை இருவருமே குழந்தை வளர்ப்பு, படிப்பு, ஒழுக்காகப் பயிற்சியளித்தல் என்று சமபங்கை ஏற்கவேண்டும். குழந்தையின் எதிர்காலத் திட்டத்தைப்பற்றி இருவருமே கவனிக்கவேண்டியுள்ளது.

ஆனால் அதேசமயம் கணவன் வேறு ஊருக்கு மாற்றல் என்று போகும்போது, குடும்பப்பொறுப்பு முழுவதும் மனைவியின் தலையில்தான் விழுகிறது. எல்லா முடிவுகளையும் அவளே எடுக்கவேண்டியுள்ளது.

எனவே இப்படிப்பட்ட, மாறிக்கொண்டே வரும் உலகத்தில், பெண்கள் வளர்ந்து மனமுதிர்ச்சி அடைந்த நிலையில் வாய்ப்புகள் வரும்போது, வெளிஉலகத்துக்கு வந்து பொறுப்புகளை ஏற்பது சிறந்தது. ★

நன்றி: சுமங்கலி

digitized by noolaham foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக் கதம்பம்

ஞாயமா?

புத்தொழில் கொஞ்சி புதுமணம் பரப்பிய
பூவினைக் கருக்கிடல் முறையோ?
இத்தனை ஆயிரம் இதயங்கள் ஏங்கிட
இழிசெயல் புரிவதும் சரியோ?

பிஞ்சுத் தளிர்க்கரம் சிந்திச் சிரித்திட்ட
பாசப் பிணைப்பினில் பின்னி,
தமை நித்தம் மறந்து நிம்மதி கண்டவர்
நெஞ்சம் பொறுக்குமோ சொல்வாய்.

பூவில் உதிர்வதும், பூரித்து மடிவதும்
பூமியில் யாங்ஙனம் நியதி,
மனப் புன்மையினாலெழும் வஞ்ச
உணர்வினில்
இன்னுயிர் பறிப்பதோ ஞாயம்.

பின்னஞ் சிறுகைகள், செல்வக் குழந்தைகள்
செகத்தினில் யாவர்க்கும் சொந்தம்
அவர் சிறுமையினால் உயிர்துடித்திடமாள்வது
பாச நெஞ்சத்துக்கே பெரும் துன்பம்.

- ஐயா ஜோசப் -

சிகரெட் ரகசியம்

நித்தம் நாங்கள்
புத்தம் புதிசு
பித்தம் கொள்வீர்
எம்மைப் பார்த்து
சுத்தமாய் நாங்கள்
சூனியக்காரர்கள்
உங்கள் உயிரை
சுரண்டும் பேர்வழிகள்
உருவம் வெள்ளை
உள்ளே அனைத்தும் நஞ்சு
உங்களை
பருவத்தின் முன்னே
பழுக்கவும் செய்வோம்
பாவம் நீங்கள்
புகைப்பீர் ரசித்து
நாம் புசிப்போம்
உம்மை ருசித்து
புரிந்து கொள்வீர் உண்மை
புகைத்தல் விடுவீர் நன்மை.

- கே. எம். முஜீப் -

இதய தாகம்

இதயம் இல்லாதவனே!
என்னிடமிருந்த
எல்லாவற்றையும்-நீ
எடுத்துக் கொண்டதாய்
எக்காள மிடுகிறாயா...?
உனக்குத் தெரியாது,
இறுதி மூச்சு இருக்கும்வரை
இலட்சியத்துக்காகவே-என்
இதயம் துடிக்கும்.

★ ★

உன்னிடம்
சொர்க்கத்தின் முகவரியைக்
கேட்கவில்லை...
நான்
தொலைந்துபோன என்
சொந்த முகவரியையே
கேட்கின்றேன்...

★ ★ ★

உன்னால்
மானுட தர்மம் மறுக்கப்பட்டு
மரணச் சந்தையில்
மனித உயிர்கள்
மலிவு விலையில்
விற்கப்படுகின்றன...

★ ★ ★

நீ நினைக்கலாம்
மரணத்தைக் காட்டி
என்னை
மண்டியிட வைக்கலாமென்று
மனித மிருகமே!
உனக்குத் தெரியாது,
மரணத்தைக்கூட - நான்
மனதார நேசிக்கின்றேன்:

★ ★ ★

கயவனே!
என்னுடைய தாகத்தை
நீ
தணியவைக்கமுடியாது...
இழந்த எனது
இருப்பிடத்தைத்
திருப்பிப் பெறும்வரை,
என்
இதயதாகமும் தணியாது.

★ ★ ★

- தமிழ்ச்செல்வி -

குழந்தை ஆனாய்

குழந்தைப் பருவத்தில் நீயோ
அழகுப் பொம்மையானாய்
அறியாப் பருவத்தில் நீயோ
விளையாட்டுப் பொருளானாய்
அறியும் பருவத்தில் நீயோ
ஆராய்ச்சிப் பொருளானாய்
வயதுப் பருவத்தில் நீயோ
காதல் சின்னமானாய்
திருமணப் பருவத்தில் நீயோ
காதல் தூதுவன் ஆனாய்
வயதான பருவத்தில் நீயோ
மகிழ்விக்கும் குழந்தை ஆனாய்.

- ச. மானினி -

மேற்கொள்ளும் உதயம்

அத்தியாயம் 6

குயிலொன்றுகூவிக் கொண்டிருந்தது. விழுந்தையில் டரப்பிக்கிடந்த ஒடியலுக்கு காவலாக குந்திக்கொண்டிருந்தார் கந்தப்பு மாஸ்டர். குயில்களைத் தொடர்ந்து காகங்களும் கரையத் தொடங்கின. வளவுக்குப் பின்னால் தெரியும் ஆலமரத்தை நிமிர்ந்து பார்த்தார். புதிதாக அமைக்கப்பட்ட காகக் கூடொன்று தெரிந்தது. காகத்துடனேயே தங்கள் கலவியில் வாழ்க்கையை ஆரம்பித்து, அதன் கூட்டையே தங்களது இனவிருத்திக்குப் பயன்படுத்துகின்ற குயில்களைப் பார்த்தார். கானமிசைக்கும் குயிலுக்கும் கர்ணகடூரமாகக் கரையும் காகத்துக்கும் எத்தனை முரண்பாடுகள்! தெரிந்தோ தெரியாமலோ அந்த முரண்பாடுகளுக்குள் இணைப்பை ஏற்படுத்தி வைக்கின்ற இயற்கையின் விந்தை! முரண்பாடுகளை இணைத்து வைப்பது தான் இயற்கையின் விதியா? முரண்பாடுகள்; முட்டுக்கட்டைகள் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து புதுவழி அமைத்தவர்தான் கந்தப்பு மாஸ்டர்.

மலையகப் பகுதியொன்றில் கடமையாற்ற நேர்ந்தபோது அந்த ஊரையே பிறப்பிடமாகக்கொண்ட பார்வதியை தனது வாழ்க்கைத் துணையாகத் தேடிக்கொண்டார். சொந்த ஊரும் உறவும் அவருக்கெதிராக அணி திரண்டது. குறுகிய உலகைவிட்டு, பரந்த உலகில் சிறகை விரிக்க தீர்மானித்தாரோ, அன்றே அவரும் தனிப் பறவையானார். அந்த தனிமையைப்போக்க பல சொந்தங்களைத் தேடிக்கொண்டார். அதிலொரு சொந்தம்தான் இந்த பார்வதியும்!

போல் அது நடந்திருந்தால்.....! அது தான் அவரின்உள்ளத்தை நிரித்துக்கொண்டிருந்தது. வயதுபோன காலத்தில், அவரை அன்பாசப் பராமரித்துப் பார்க்க ஒரு பிள்ளையில்லை.

கேற்றின் கிறீச் என்ற சத்தம் அவரை அழைத்தது. எழுந்து முன்பக்கத்திற்குச் சென்றார். செல்லம்மா வந்தாள்.

''முதல்ல அந்த தொட்டிய நிரப்பிவிடு! நல்லா அள்ளித்தேய வேணும்.....'' அவளுக்கு ஆச்சரியமாகவிருந்தது. காலை வேளைகளில் அவர் குளிப்பதில்லை. மத்தியானத்தில் தான் குளிப்பார்.

அதுசரி! இரண்டு கொத்து அரிசியும் கொஞ்ச புளியும் உனக்கு வைச்சிருக்கிறன். எடுத்துக் கொண்டு போ!'' - மாதச் சம்பளந்தான் பேச்சென்றாலும், அவளுடைய நிலையைக் கண்டு, இரங்கி இடைக்கிடை அன்பளிப்புகளை வழங்குவார். அதிகாலை வேளையில் அவரைத் தொந்தரவு செய்கின்ற, ஆஸ்த்துமா நோய்கூட, இப்போது ஓரிரு நாட்களாக அவரை விட்டு அகன்றிருந்தது. மனம் தான் நோயைக் கட்டுப்படுத்தியதா? எல்லாமே மனம் தான்! இன்பம் என்று துள்ளுவதும் மனம்தான்! துன்பமென்று துவள்வதும் மனம்தான்! அதிகாலை குளிருக்கு போர்த்து மூடிக்கொண்டு, முச்சிரைத்துக் கொண்டிருப்பவர்; குளித்து முழ்கும் உற்சாகத்திலிருக்கிறார். மனம் மீண்டும், மீண்டும் அலைமோதி அவர் உணர்வைத் தட்டியெழுப்பி, வறண்டு துருப்பிடித்திருந்த இதயக் கம்பிகள் நாதமிசைத்துக் கொண்டிருந்தன. இளமை உணர்வுகள், இதயத்தில் பொங்கி யெழுந்தன. முரண்பாடுகள், முட்டுக்கட்டைகளை உடைத்தெறிந்து புதுவழியை அமைத்த அதே உற்சாகம் அலையெழுப்பிக் கொண்டிருந்தது.

ஜெகன்; சொந்த ஊருக்கு இடமாற்றலாகி, வந்ததும் மீண்டும் அந்த ஆசை துளிர்விட்டது. அந்தப் புதிய தீர்வினை பார்வதியிடம் எப்படிக் கேட்பது? படிப்பறிவற்று பழமையான கோட்பாடுகளுக்குள் வாழும் அவள்; எப்படி அந்த முடிவினை ஜீரணித்துக் கொள்வாள்? அவளிடம் கேட்பது புத்திசாலித்தனமல்ல என்று தென்பட்டது. ஜெகனிடமே அதனைப் பற்றிக் கேட்கத்தீர்மானித்தார். ''ஜெகனை ஒருக்கா வந்து என்னைச் சந்திக்கச் சொல்லு...'' ஆளனுப்பி அவனுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ''மாஸ்டர் வரச்சொன்னவிங்களாம்...'' - திரும்பி அவனைப்பார்த்தார். சலனமற்று அமைதியாகவிருக்கு அவனுள் சலசலப்பை ஏற்படுத்தப் போகின்றாரா? அல்லது புதுமையான தனது கருத்துக்கு செயலுருவம் கொடுக்கப் போகின்றாரா?

''தம்பி! உன்னுடைய திருமணத்தைப்பற்றி என்ன முடிவெடுத்திருக்கிறாய்...'''' என்னுடைய முடிவென்னவிருக்கு? அம்மாவினுடைய முடிவுதான் என்னுடைய முடிவும்- ''— அவருடைய இதயம் குளிர்ந்தது. இனி அவருடைய முடிவினைக் கூற வேண்டியதுதான்! ''ஜெகன்! உன்னுடைய அம்மாவிடமும் இதைப் பற்றி நான் கேட்டயில்ல உன்னட்டதான் கேட்கிறன். இதை நீ ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், பரவாயில்லை'' - ஆரம்பித்தார் கந்தப்பு மாஸ்டர்.

''ஜெகன்! நீ வித்தியாவ மறுமணம் செய்தாலென்ன.....?''

குண்டுகள் வெடித்துச் சிதறின. அவைகள் பழமையை அழித்து, புதுயுகம் படைக்கப்போகின்றனவா? வரும்போது தற்செயலாக நடந்துவிட்ட அந்தச் சம்பவம் ஒரு கணம் மின்னவிட்டு மறைந்தது. ''ஜெகன்! என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ...'' முகம் சிவந்து கண்கள் கலங்கியிருந்த விதம், அதனைத்தான் உணர்த்தியது. பாடசாலையால் வந்து, சாப்பிட்டு, குட்டித் தூக்கம் போட்டு, எழுந்தபோது, நாலு மணியும் கடந்துவிட்டது. அவசரமாக புறப்பட்டுக் கொண்டு படலையைத் திறந்தான் ஜெகன். அதே நேரம் அவளும் அந்த ஒழுங்கைக் கூடாக படலையை நெருங்கினாள். 'அண்ணி! மாஸ்டர் வீட்டுப்பக்கம் போயிட்டு வாறன்...'' பார்வதி ஏற்கெனவே அந்த விஷயத்தைப்பற்றிக் கூறியிருந்தாள். அவள் மனம் புழுங்கிக் கொண்டிருந்தது. மங்களகரமான நல்ல விஷயத்தைப்பற்றிக் கதைக்கச் சொல்லும்போது, அபசகுனமாக எதிர்ப்பட்டு விட்டோமே...''

''வித்தியா! உனக்கென்றொரு மறுவாழ்வு அமையக் கூடாதா? காதலுக்காக உறவுகள் சம்பிரதாயங்கள் எல்லாவற்றையுமே தூக்கியெறிந்து வந்திருக்கிறாய். உன்னுடைய பிறந்தவீட்டுக்கும், திரும்பிச் செல்ல முடியாமல் தனிமரமாக நிற்கிறாய். அந்தக் களங்கத்தைப் போக்குவதில், அந்தக் கண்ணாரைத் துடைப்பதில் என்ன தவறு நேர்ந்து விடப்போகின்றது?

''மாஸ்டர்! உங்கட முடிவ முழுமனசாக ஏற்றுக்கொள்ளுகிறன்...'' அவனுடைய முடிவும் தெரிந்ததாகி விட்டது இனி திருமணம் நடந்தது போலத்தான்!

அந்த ஆலமரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். கந்தப்பு மாஸ்டர். அதேகுயில்... சோடி சேர்ந்து கூவிக்கொண்டிருக்கின்றது. அவளுடைய வாழ்வில் மீண்டும் வசந்தம் வீசப் போகின்றதா?

அத்தியாயம் 7

தெருவிளக்குகள் ஒளிர்ந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனால் பாதை மங்கலாகவே தெரிகின்றது. சட்டவிரோதமான மின் இணைப்புக்களால் மின்குமிழ்கள் பிரகாசமின்றி மின்னிக்கொண்டிருந்தன முற்றாக இருளுக்குள்ளேயே நடந்து செல்லக்கூடிய துணிச்சல் அவளுக்குண்டு. ஆனால் அந்த மங்கலான ஒளியைத் தான் அவளால் ஜீரணிக்க முடியவில்லை. இருளான அவள் வாழ்வை இடைக்கிடை குறுக்கீடு செய்கின்ற அந்த ஒளி... பாதையை மறிக்கின்ற சஞ்சலங்கள் சபலங்கள் எல்லாவற்றையுமே முறியடிக்க வேண்டும்! நடையில் ஆவேசம் தெரிந்தது. 'வித்தியா...! மீண்டும் புது வாழ்வு பெற்று வாழக்கூடாதா? உன்னுடைய வாழ்வில் மீண்டும் ஒரு வசந்தம் வீசக் கூடாதா...?— விதிவிலக்காக ஒரேயொரு மின்குமிழ் மட்டும் பிரகாசமாகத் தெளிவான பாதையைக் காட்டியது

விதிவிலக்காக வாழ்ந்து காட்டினால் என்ன? இருளுக்குள்ளேயே தன் வாழ்வை மூடிக்கொள்ள திடங்கொண்டிருந்தபோது தான், ஜெகனும் இடமாற்றம் பெற்றுக் கொண்டு வந்தான். மாலையானதும் வேளைக்கே உறங்கி விடுகின்ற அந்த வீடு, இப்போது சில நாட்களாகச் சிறிது கலகலப்பாகவிருக்கின்றது. இரவுச் சாப்பாட்டுக்கு மூவரும் ஒன்றாகக் கூடுவார்கள். அன்றிரவு சாப்பிட்டபின் முற்றத்தில் உலாவிக்கொண்டிருந்தான் ஜெகன்.

'தம்பி! போன விஷயம் என்னவாம்? மாஸ்டர் என்ன சொன்னவர்? — பார்வதி கேட்டாள்.

'எல்லாம் வெற்றியாகவே முடியும் அம்மா.....' கூறிவிட்டு வித்தியாவை அவதானித்தான். அவளுடைய உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. அப்போதும் அவளுள் விருந்த கபட எண்ணம் புரியவில்லை. இப்போது..... அதன் மர்மமே புரிந்தது. விஜயன் இறந்த நேரமே, எல்லா உறவுகளையும் வெறுத்து, தனியாகத் துறவறம் பூண்டிருக்கலாம். பாவம்! பார்வதி என்ற உறவை தொடரப்போய்..... அன்பு, பாசம், கருணை எல்லாமே துயரத்தின் ஏணிப்படிகளா.....?

'ஜெகனும் நீயும் மறுமணம் செய்து, வாழ்ந்தால் என்ன? அத்தகைய எண்ணம் ஜெகனுடைய மனத்திலென்ன..... யாருடைய மனத்திலாவது உருவாகிய பின், இனி அந்த வீட்டில் வாழமுடியுமா? மனிதனுடைய சிந்தனைகளும், கண்ணோட்டங்களும் திசை மாறிய பின், எப்படி சலனமில்லாமல் வாழ முடியும்?

அன்று! செவ்வாய்க்கிழமை போயா தினமாகையால் கடமைக்குச் செல்லவில்லை. துர்க்கையம்மன் ஆலயத்துக்குச் சென்றிருந்தாள் வித்தியா. திரும்பி வரும்போது, கந்தப்பு மாஸ்டர், படலையடியில் நின்று கொண்டிருந்தார். 'புள்ள ஒருக்கா வீட்டை வாவன்.....'—

(8 ஆம் பக்கம் பார்க்க)

- அநுராசன் மகன் -

சஞ்சீவி குறுநாவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளைப் பலியெடுக்கும் இளம்பிள்ளை வாதம்

வைத்திய கலாநிதி விளக்கம்

செவ்வி: வில்வம் பகுதி

கேள்வி: தற்போது யாழ் மாவட்டத்தில் இளம்பிள்ளை வாதநோய் பரவி, பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு முன்பும் இப்படிப் பரவியதுண்டா?

பதில்: இந்நோய் இலங்கையில் ஆறு வருடங்களுக்கு ஒரு முறை கூடுதலாக தோன்றியது. இதற்கு முன் 1974 இலும் 1980 ஆம் ஆண்டிலும் தோன்றியது. 1986 இல் இந்நோயின் தாக்கம் அதிகம் இருக்கவில்லை.

கேள்வி: இந்த நோயின் ஆரம்ப அறிகுறிகள் எவை?

பதில்: காய்ச்சல், சத்தி, தொண்டைநோ, தலையிடி, வயிற்றோட்டம் பெலவீனம் போன்றவையாகும்.

கேள்வி: ஒரு வீட்டில் ஒரு குழந்தை இந்த நோயினால் பீடிக்கப்பட்டால், அவ்வீட்டிலுள்ள மற்றக்

யாழ் மாவட்டத்தில் இளம்பிள்ளைவாத நோய் பரவுகிறது. சுமார் எழுபது குழந்தைகள் பாதிப்பு அடைந்துள்ளார்கள். அவர்களுள் எழுவர் இறந்துவிட்டார்கள்.

இந்த நோய் பற்றி யாழ் அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சே. நடராஜா கூறிய கருத்துக்கள் இவை:

குழந்தைக்கும் தொற்றும் அபாயம் உண்டா?

பதில்: ஆம், அனேகமாக தடுப்பு மருந்து கொடுக்கப்படாத குழந்தைகளுக்கு தொற்றும் அபாயம் உண்டு.

கேள்வி: இந்நோய் வராமல் தடுப்பதற்கான வழிவகைகள் என்ன?

பதில்: இந்நோய் வராமல் தடுப்பதற்கான ஒரே வழி, உரிய காலத்தில் தடுப்பு மருந்து கொடுப்பதுதான்.

கேள்வி: இவ்விடயத்தில் பெற்றோரின் கடமை என்ன?

பதில்: நோயின் அறிகுறி தென்பட்ட உடனேயே பெற்றோர் பிள்ளையை ஆஸ்பத்திரியில் அனுமதித்து தகுந்த வைத்திய சிகிச்சை அளிக்கவேண்டும். இப்படிச் செய்வதனால் நோயினால் பீடிக்கப்பட்ட குழந்தையைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவது மட்டுமன்றி குறிப்பிட்ட இராமத்தில் நோய் பரவுவதைத் தடுக்க சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க உதவியாகவும் இருக்கும் எனினும் நான் ஏற்கனவே கூறியது போல் பெற்றோரின் முக்கிய கடமை தமது பிள்ளைகளுக்குத் தவறாது போலியோத் தடுப்பு மருந்தை உரிய காலத்தில் கொடுப்பதேயாகும்.

கேள்வி: போலியோ தடுப்பு மருந்து எந்த வயதில் கொடுக்க வேண்டும்?

பதில்: மூன்று தடவைகள் இத்தடுப்பு மருந்து கொடுக்கவேண்டும். மூன்றாவது மாதத்தில் முதல் தடவையும், இரண்டாவது தடவை ஐந்தாவது மாதத்திலும். மூன்றாவது தடவை ஏழாவது மாதத்திலும் கொடுக்க வேண்டும்.

கேள்வி: போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகளும் சில இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளது உண்டு. இதற்குக் காரணம் என்ன?

பதில்: போலியோ வைரஸ் கிருமிகளில் மூன்று வகை உண்டு. மூன்று தடவைகள் கொடுக்கப்

வைத்திய சஞ்சிகை

படும் தடுப்பு மருந்துகளிலும் இம் மூன்று வகையான கிருமிகளையும் எதிர்க்கும் சக்தி உண்டு.

ஒரு முறை தடுப்பு மருந்து கொடுக்கும் போது ஒரு வகையான வைரஸ் கிருமிகளுக்கான எதிர்ப்புச் சக்தியே உடம்பில் உருவாகின்றது. எனவே மூன்று தடுப்பு மருந்துகளையும் நாள் ஏற்கனவே குறிப்பிட்டது போல் முறையாகக் கொடுத்தால் தான் குழந்தையின் உடம்பில் போலியோ வைரஸ் கிருமிகளை முற்றாக எதிர்க்கும் சக்தி உருவாகின்றது. இந்த மூன்று ''டோஸ்'' இல் ஒன்றையோ அல்லது இரண்டையோ தவறவிடின் குழந்தைக்கு நோய் தொற்றும் அபாயம் ஏற்படுகின்றது. மூன்று முறையும் ஒழுங்காக தடுப்பு மருந்து கொடுத்தும் குழந்தைக்கு நோய் தொற்றி இருப்பின், அக்குழந்தைக்குக் கொடுக்கப்பட்ட தடுப்பு மருந்து சரியான முறையில் பேணப்பட்டிராமை காரணமாக இருக்கலாம்.

கேள்வி: இந்த நோய் குழந்தைகளை மட்டும் பீடிக்குமா அல்லது வயது வந்தோர்களையும் பீடிக்குமா?

பதில்: அனேகமாகக் குழந்தைப் பிள்ளைகளே இந்நோயினால் பீடிக்கப்படுகின்றார்கள் ஆனால் சில சந்தர்ப்பங்களில் ஐந்துவயதுக்குக் கூடிய பிள்ளைகளும் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் இது மிகவும் அரிது.

கேள்வி: பெற்றோருக்குத் தாங்கள் கூறும் அறிவுரை யாது?

பதில்: இந்த நோய் வராமல் இலகுவில் தடுக்கலாம். இதற்குப் பெற்றோர் முக்கிய கவனமும், அக்கறையும் செலுத்த வேண்டும். நோய் வந்தபின் சிகிச்சைக்குப் போவதிலும் நோயே வராமல் தடுப்பது மேல் எனவே பெற்றோர் உரிய காலத்தில் தங்கள் குழந்தைக்கு தவறாது போலியோ தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும். ★

அனுகரணம் பற்றிய விளக்கம்

ஒரு அங்கி பிறிதொரு அங்கியைப் போன்று பாவனை செய்தல் அனுகரணம் எனப்படும். சாதாரணமாக சாதுவான அங்கிகள் பயங்கரமான அல்லது விடமுள்ள அங்கிகளைப் போன்று பாவனை செய்வதுண்டு. உதாரணமாக சாரைப்பாம்பு நாகபாம்பைப்போலவும், சில ஈக்கள் தேனீக்கள் குளவிகள் போலவும், நஞ்சற்ற சில வண்ணத்துப் பூச்சிகள் நச்சுத்தன்மையான வண்ணத்துப்பூச்சிகள் போன்றும் பாவனை செய்வதனால் தப்பிப் பிழைக்கின்றன. இத்தகைய இசைவாக்கம் சில தாவர இனங்களிலும் காணப்படும்.

படம் (1)
சாதாரண பாம்புக்கற்றாளை
சாதாரண பாம்புக் கற்றாளை (Sanseveria Zeylanica) யில் இலைகளில் குறுக்கான அடையாளங்கள் காணப்படும் இவை நச்சுப் பாம்புகளின், சிறப்பாக சுருள வளையின் (Krait), திறத்தை ஒத்ததாகவிருக்கும். தண்டும், நிலத்துக்கு மேலே தெரிந்தால், பாம்பின் வயிற்றுப் புறத்திற்கு ஒப்பானதாயிருக்கும். மேற்படி பொறிமுறை காரணமாக இத்தாவரங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கின்றது.



படம் (2)
'அலங்கார பாம்புக் கற்றாளை

அலங்காரத்திற்குரிய பாம்புக் கற்றாளையில் (Sanseveria SP) பசிய இலைகளில் நெடுக்கான மஞ்சள் கோடுகள் இரண்டு உண்டு. இலை நுனி விரிவடைந்து, வளைந்து பாம்பின் படம் போலவிருக்கும். இலை முனை கூரில் முடிவடையும். புல், பூண்டுசள், செடிகளிடையே இத்தாவரம் காணப்படும் போது படமெடுத்தாடும் பாம்பு போலவிருக்கும். இதன் காரணமாக இத்தாவரத்துக்குப் பாதுகாப்புக் கிடைக்கின்றது.

பாம்புக்கருணை (Arisae-ma), சட்டிக் கருணை (Amorphophallus) போன்ற தாவரங்களில் இலைக்காம்பு, பூந்துணர்ச்சி போன்ற அமைப்புக்களின் நிறமும் வடிவமும் பாம்புக்கருணை (Snak Plant) என்று மனிதனே பெயர் சூட்டியதிலிருந்து பொறிமுறையின் சிறப்புப் புலப்படுகின்றதல்லவா.

பொய்க்கோலம் (amoflage) பொதுவாக விலங்குகளின் தாவரங்களின் பிடையன் பாம்புகளுக்கு ஒப்பானதாயிருக்கும். பூந்துணர்ச்சியிலுள்ள தனிப் பூவடியிலை மடல் போன்றதாகவும், பாம்பின் படத்திற்கு ஒப்பானதாகவுமிருக்கும். (பிடையன் பாம்புகள் படமெடுப்பதில்லை என்பது விலங்குகளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.) இத்தகைய பொறிமுறைகள் காரணமாக மேற்படி தாவரங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கின்றது.

பாம்புக்கற்றாளை, பாம்புக்கருணை, சட்டிக் கருணை போன்ற தாவரங்கள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ற நிறங்களை உடையவையாகவிருக்கும். மறைந்து வாழுவதற்கும் எதிரிகளிலிருந்து தப்புவதற்கும் இது ஏற்றதாக அமையும். பசிய சூழலில் வாழுபவை பச்சை நிறமுடையவையாகவும், நிலவாழ்க்கைக்குரிய சமில உடலில் வெள்ளைப்புள்ளிகள் அல்லது கோடுகளை உடையவையாகவும், இன்னும் பல நிறவடிவங்களை உடையவையாகவும் காணப்படும். இரை கௌவிகளிலும் சூழலுக்கேற்ற நிறவடிவங்கள் காணப்படும். மறைந்து தாக்குவதற்கு இது வசதியாக அமையும். மேலும் பொதுவாக விலங்குகளில் (மனிதனைத் தவிர) மேற்பக்கம் கருமையாகவும், வயிற்றுப்புறம் வெளிறியுமிருக்கும். இதுவும் ஒரு இசைவாக்கமாகும். இத்தகைய இசைவாக்கங்களைத் தவிர, சில விலங்குகள் பொய்க்கோலம் பூணுவதுண்டு.

பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. சாதாரணதர உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கு உசாத்துணையாக அமையும் ஆக்கங்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளியாக உள்ளன.

பாடம் பயில்வோம்

- கே. எல். குகதாசன் -
(அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

இலங்கைப் பாத்திரங்களுள்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

என்று கூறலாம். இந்திர சித்தன் திறமையாகப் போரிடுவதற்குக்கூட சித்தப்பாவான கும்பகர்ணன் ஓரளவிற்குக் காரணமாக இருந்திருக்கவேண்டும்.

காரை சுந்தரம்பிள்ளை:-

ஒருவனுடைய வீரத்தை இரண்டு வகையாகக் கணிக்கலாம். ஒன்று நேருக்குநேர் நின்று போர் செய்வது. மற்றது வீரத்துடன் சில கருத்துக்களை முன்வைப்பது. யாருக்கு முன்வைப்பது என்றால், பிரச்சினையான இடங்களிலே தனக்கு, அதனாலே ஆபத்துவரும் என்கிற இடத்திலும்கூட நேர்மையாக நின்று வாதிடுவதுகூட ஒருவகை வீரம்தான்.

சீதையைக் கொண்டுவந்தது தவறு என்று தன் தமையனுடன் வாதிட்டிருக்கிறான் கும்பகர்ணன். இந்திரசித்தும் வாதிட்டிருக்கிறான். மகன் தெரிந்தோ தெரியாமலோ சில கருத்துக்களை சொல்லலாம். ஆனால், மகன் தந்தைக்குச் சொல்வதிலும், தம்பி தமையனுக்குச் சொல்வதிலும் ஒரு வேறுபாடு இருக்கிறது. தம்பி சிறிது அச்சத்துடன் தான் சொல்லவேண்டும். குலச்சிறுமை செய்தான் என்று சொல்கிறான். அப்படிச் சொல்வதும் ஒரு வீரம் தான்.

போர்க்களத்திற்குப் போகும் கும்பகர்ணனை அவனது ஒரு தோளிலிருந்து மறு தோள்வரை இராமன் பார்க்கும்பொழுது ஒருநாள் எடுப்பதாக கம்பன் சொல்கிறான். இராவணன் நிற்க. கும்பகர்ணன் இருக்க. ஒரே உயரமாக இருப்பது அவனது உடல் வலிமையைக் காட்டுகிறது.

அவனது உருவச் சிறப்பை கம்பன் அழகாக வர்ணிக்கிறான். மாயவித்தையில் வல்லவன் இந்திரசித்து. ஒளித்துநின்று மாயவித்தை காட்டிப் போர் செய்து தன் வீரப்பிரதாபங்களை வெளிப்படுத்தி இந்திரசித்தனை, நேருக்குநேர் நின்று போரிட்ட கும்பகர்ணனுடன் ஒப்பிடுவது சற்றும் பொருந்தாது.

கும்பகர்ணனின் கையை இராமன் துண்டித்துவிட்டபோதிலும், அந்தக் கையாலேயே ஆயிரக்கணக்கான குரங்கினங்களைக் கொன்று குவித்தவன், இதனைப் பார்த்த தேவர்களும், ஏனையோரும் அஞ்சினார்களாம். கை வெட்டப்பட்டது, கால்வெட்டப்பட்டது. நொண்டி நொண்டிச் சென்று வாயாலேயே மலையொன்றைப் பிடுங்கி எதிரிகள்மீது விசினான் என்றால் கற்பனைபண்ணமுடியுமா? இந்திரசித்தனைவிட எத்தனையோ மடங்கு மேலான இலக்குவன் கும்பகர்ணனிடம் தோற்றான் என்றால், அவனது வீரத்தைச் சொல்லவும் வேண்டுமா?

திரு. தணிகாசலம்,-

கும்பகர்ணன் போருக்குப்போகும்பொழுது யானையின் முகத்தில் அணியப்படும் கடர்மணியை, இராவணன் அவனுக்குச் சூட்டிவிடுகிறான். இந்திரனைப் புறங்கொண்ட நீ இராமனையும் புறங்கொள்ளவேண்டும். அந்த நினைவு உள்ளத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான்.

போர்க்களத்தில் கும்பகர்ணனைக் கண்ட இராமன் விபீஷணனிடம் 'யாரப்பா இவன்' என்று கேட்கிறான். சூரியனின் ஒளியே, இவனது உடலினால் மறைக்கப்பட்டு, எங்குமே இருள் சூழ்ந்துவிட்டது ,என்று கம்பன் அழகாக வர்ணிக்கிறார். அந்த அளவு ஆற்றலும், வீரமும் உள்ளது.

''உளன் உயர்ந்த உரத்தினன் மேன் நிமிர்ந்த மிடுக்கினன்'' என்று கம்பன் சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது. உடலால் மட்டுமல்ல உள்ளத்தாலும் உயர்ந்தவன்

இராமனால் மூக்கு அறுபட்டுவந்த சூர்ப்பனகை 'வானவரைப் புறங்கொண்ட மருகாவோ' என்றுசொல்லி முறையிட்டபொழுதும், தங்கைக்காக கும்பகர்ணன் ஒருவனே குரல்கொடுத்தான்.

தன்னுடைய அண்ணன் இராவணன் போர்க்களத்தில் இறந்தால், தங்கள் குலத்திற்கே அவமானம் என நினைத்தவனாக அவனுக்காகவே தெரிந்து கொண்டேதன்னுயிரை நீத்தவன்.

தன்னுடைய அந்த வீர சமுதாயம் இத்துடன் அழிந்துபோகக்கூடாது. அந்த வீரபரம்பரை தொடர்ந்தும் வாழவேண்டும் எனநினைத்தவன் கும்பகர்ணன். ★

திரு. இ. ஜெயராஜ் வழங்கிய நடுவர் தீர்ப்பு இதோ!

இரு கட்சிக்காரர்களும் பேசியதைப் பார்க்கும் போது இருவருமே சிறந்த வீரர்கள் என்பது தெரிகிறது. அகவீரம், புறவீரம், உடல்வலிமை எல்லாமே இருவருக்கும் இருக்கிறது. இவற்றிலே எந்தச் சந்தேகமும் கிடையாது,

எனினும் இருவருக்கும் இடையில் சிறிய வித்தியாசம் இருக்கிறது. கும்பகர்ணன் நேருக்கு நேர் நின்று போர் செய்தான் தன் உடல் உள வலிமைகளையே அவன் துணையாகக் கொண்டான். ஆனால் இந்திர சித்தனோ பல சந்தர்ப்பங்களில் மாய வேலைகள் பல செய்தான். யாசம் செய்தான். உருவம் மாறினான். அந்தரத்தில் நின்றான் இவ்வாறு அகவீரம் புறவீரம் இரண்டுக்கும் அப்பாற்பட்ட மாய வேலைகளின் துணையினால் போராடினான். இது காரணமாக இந்திரசித்தனுடைய வீரத்துக்குச் சிறிது இழுக்கு ஏற்படுகிறது.

கம்பராமாயணத்தில் காப்பியத்தலைவன் இராமன். அவனே இராமாயண வீரர் எல்லாருள்ளும் தலை சிறந்தவன். காப்பியத்தலைவன் தன்னிகரில்லாதவன். தன்னிகரில்லாதவனை இராமனே கும்பகர்ணனுடன் போரிடும்போது ஒரு முறை தளர்ந்து போகிறான். ''வள்ளலும் மலர்க்கரம் வதிர்த்தான்'' என்று கம்பன் கூறுகிறான்.

எனவே இருவருமே சிறந்த வீரர்கள்தான் என்றாலும் மேற்சொன்ன இரண்டு காரணங்களாலும் இந்திரசித்தனை விட கும்பகர்ணனே வீரத்தில்விஞ்சி நிற்கிறான். ★

கடின உழைப்பால் உயர்ந்தவர்

அன்று 5 ஆம் திகதி சனிக்கிழமை

யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் ''பசியுடன்'' சுபாஷ் ஹோட்டலின் முன்னால் நின்று கொண்டிருந்தனர்.

என்ன செய்தியாளர்களுக்கு அந்தளவு ''பசி''யா?

ஆம். அவர்களுக்குச் செய்திப் ''பசி''.

சுபாஷ் ஹோட்டலில் உலக வங்கிக் குழுவினர் தங்கி நின்றனர்.

அவர்களிடம் செய்தி ''வேட்டை''யாடவே செய்தியாளர்கள் காத்து நின்றனர்.

இதை அங்கு ''சிம்பிள்'' உடையுடன் நின்ற ஒருவர் அவதானித்து விட்டு, ஹோட்டலின் கணக்காளரிடம் ஏதோ சைகை காட்டிக் கேட்டார். கணக்காளர் ஏதோ கூற, அவர் எம்மிடம் வந்தார்.

''ஆ! தம்பிமார்கள், பேப்பர் காரர்களா?'' என்று கேட்டு விட்டு உள்ளே அழைத்து அமரச் சொன்னார்.

நாங்கள் அமர்ந்து கொண்டோம்.

''கூல் டிரிங்ஸ்'' ஓடர் செய்தார்.

கூல் டிரிங்ஸ்'' வர அருந்தினோம்.

இவ்வளவு செய்த அந்த நபர் யார் என்று நினைக்கிறீர்கள்?

சாட்சாத் சுபாஷ் ஹோட்டல் உரிமையாளர் சங்கரன் ஐயா தான் அவர்.

அத்தோடு அவர் விட்டுவிடவில்லை. யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் சேவையை மிக வெகுவாகப் பாராட்டினார்.

அவரோடு நேரம் போவது தெரியாமல் சுமார் மூன்று மணி நேரம் அரசியல் முதற் கொண்டு, அவரது சொந்த வாழ்க்கை சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களையும் அலசு அலசு என்று அலசினோம்.

அப்போது அவர் வாழ்க்கையில் கஷ்டப்பட்ட நிலையில் இருந்து ஓர் உயர்ந்த தொழிலதிபர் நிலைக்கு வந்ததன் இரகசியம் தெரிய வந்தது.

இதோ அவருடன் பேசித் தெரிந்து கொண்டதை இங்கு படியுங்கள்:-

இந்தியாவின் கேரள மாநிலத்தில் காணிப்பையூரில் கஷ்டப்பட்ட குடும்பத்தில் 1914 இல் பிறந்தவர் ஐயப்பன் சங்கரன்.

குடும்பக் கஷ்டத்தின் காரணமாக 1928 ஆம் ஆண்டில் — 14 வயதில் — நண்பர்கள் சிலருடன் அவர் இலங்கைக்கு வந்தார்.

தமது உறவினர் ஒருவர் கருணத்துறையில் இருப்பதை அறிந்து அங்கு சென்று அவர் உதவியுடன் ''சொர்ணபாலி'' தனியார் பஸ் கம்பனியில் வேலைக்குச் சேர்ந்தார்.

கராஜ்ஜில் உதவியாளர்வேலை, மாதச்சம்பளம் 8 ரூபா 50 சதம். அதுவும் சாப்பாடு இல்லாமல் தான்.

ஒருநாளைக்கு மூன்று வேளை சாப்பாட்டிற்கும் 25 சதம் செலவு. அதாவது மாதத்தில் சம்பளத்தில் 7 ரூபா 50 சதம் செலவாகி விடும். மிகுதி 1 ரூபா தான்.

அங்கிருந்து கொண்டு தமது விடாமுயற்சியுடன் கார் செலுத்தப் பழகி அங்கேயே கார்ச் சாரதி ஆகிவிட்டார். ஆனால் சம்பளம் அதே 8.50 தான்.

இப்படியே எட்டு வருடங்களை அங்கேயே கழித்து விட்டார்.

அங்கிருந்து 4 ரூபா சம்பள உயர்வு கிடைக்கவே — அதாவது 12 ரூபா 50 சத சம்பளத்துக்கு அரச ஊழியரான இராஜசிங்கம் என்பவரிடம் வேலைக்குச் சென்றார்.

வேலை டிரைவர் வேலை தான். 4 வருடங்கள் அங்கும் ஓடிவிட்டன.

1939 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தார். யாழ் பாண மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் இராமநாதனிடம் டிரைவராகச் சேர்ந்தார்.

அவரிடம் 15 ரூபா சம்பளத்துக்கு சுமார் 3 வருடங்கள் வேலை செய்தார்.

இதன் பின்னர் இராமையாச் செட்டியாரிடம் வாடகைக் கார் டிரைவராகச் சேர்ந்து கொண்டார்.

இவரின் நேர்மையை அறிந்து கொண்ட செட்டியார், 3000 ரூபா கடனாகக் கொடுத்தார்.

அந்த மூவாயிரம் ரூபாவுடன் கஷ்டத்துடன் சேமித்து வைத்த இன்னும் மூவாயிரம் ரூபாவைக் கொண்டு ஆறாயிரம் ரூபாவுக்கு ஒரு காரைச் சொந்தமாக வாங்கி விட்டார்.

அப்பொழுது யுத்த காலமாதலால் பெற்றோல் இல்லாமல் கார்கள் எல்லாம் கராஜுகளுக்குள் முடங்கிக் கிடந்தன.

அப்பொழுது வீட மைப்பு அமைச்சராக இருந்த சேர். மகாதேவா இவரின் நிலைமையை — நேர்மையை— அறிந்து கார் 'பெர்மிட்'— அதாவது பெற்றோல் 'பெர்மிட்' ஒன்றைப் பெற்றுக்

கொடுத்தார்.

மற்றோருவருக்கும் பெற்றோல் 'பெர்மிட்' இல்லாததால் கார்கள் ஓடவில்லை.

சங்கரன் ஐயாவின் கார் மட்டும் யாழ்ப்பாணத்தில் வாடகைக் காராக ஓடியது.

ஒருவாறு அந்தக் காலத்து இராணுவத்தினரிடம் பணம்கொடுத்து மேலதிகப் பெற்றோலையும் பெற்றுக்கொண்டதால், அவரது கார் இரவு பகல் எந்நேரமும் ஓடிக்கொண்டே இருந்தது.

ஓய்வு ஒளிச்சலின்றி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சளைக்காமல் பாடுபட்டு உழைத்தார்.

அதன்மூலம் கணிசமான பணம் சேர்ந்தது. அதில் செட்டியாரின் கடனும் கட்டியாகி விட்டது.

மிகுதி இருந்த பணத்தில் இரண்டாயிரம்ரூபாவுக்கு ஆஸ்பத்திரி வீதியில் ஒரு கடையை வாங்கினார். (அதுதான் இப்போதுள்ள சுபாஷ் கபே)

அந்தத் தேனீர் கடையை அரசாங்க அதிபர் திரு. குமாரசாமியும் அவரது பாரியாரும் திறந்து வைத்தனர்.

அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு இரண்டு கார்களை வாங்கி, அவற்றை வாடகைக் காராக சேவையில் விட்டார்.

இந்தக் காலகட்டத்தில் சங்கரன் ஐயா இல்வாழ்க்கையில் ஈடுபட முனைந்தார்.

அது 1947 ஆம் ஆண்டு.

கேரளாவுக்குச் சென்றார்.

அங்கு சென்று தமது சொந்த ஊரான காணிப்பையூரில் திருமணம் செய்து கொண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்து விடுகிறார்.

வருடங்கள் பல ஓடின.

தேனீர் கடைக்குப் பக்கத்துக்குக் கடையையும் வாங்கி விட்டார்.

அதில் யாழ்ப்பாணத்திலேயே முதன்முதலாக ஓர் ஐஸ்கிறீம் கடையைத் திறந்தார்.

இவரது உழைப்பின் நேர்மையையும்— கண்ணியத்தையும்— அறிந்து கொண்ட சிவகுரு என்பவர் தமது கடையையும் எடுத்து நடத்தும்படி கூறி வற்புறுத்தினார்.

அதற்கு அவர் 'ஐயா! எனக்கு இது எல்லாம் போதும். இன்னும் ஒரு கடை எனக்குத் தேவையில்லை' என்றார்.

அவர் விடவில்லை. நீங்கள் தான் எனது கடையை நடத்த வேண்டும் என்று வீடாப்பிடியாகக் கூறி விட்டார்.

அவரது வற்புறுத்தலை அடுத்து இவரது இரண்டு கடைகளுக்கும் அடுத்ததாக உள்ள மூன்றாவது கடையான — சிவகுருவின் கடையைப் புரியாணிக் கடையாகத் திறந்தார்.

இந்தக் கடைகளின் மூலம் கிடைத்த இலாபத்தைக் கொண்டு ஆறு டாக்ஸிகள் எடுத்து ''சுபாஷ் டாக்ஸி'' சேவையை நடத்தத் தொடங்கினார்.

அதன் பின்னர்—

பலகாலம் வாடகை வீட்டில் இருந்தவர், விக்டோரியா றோட்டில் வீடு ஒன்றைக் கட்டி அங்கு குடி புகுந்தார்.

அதே சமயம் அதே றோட்டில் பெரிய ஹோட்டல் ஒன்றையும் கட்டி முடித்தார்.

உழைப்பை மாத்திரம் இவர் கவனிக்கவில்லை. தமது ஏழு பிள்ளைகளையும் படிக்க வைத்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்தார்.

சங்கரன் ஐயாவின் தொழில் திறனை இப்போது மகன் திரு. ஹரிஹரன் கவனித்து வருகிறார். ★

- செல்வி: எம். பேரின்பநாயகம் -

மேற்கிற் தோன்றும்....

(7ஆம் பக்க தொடர்ச்சி)

மறுக்காமல் சென்றாள்.

வீடு அலங்கோலமாகக் கிடந்தது. எங்கும் தூசி படிந்து, பொருட்கள் சிதறிக் கிடந்தன. அவரைக் கவனிக்கவே, இன்னொருவருடைய உதவி தேவைப்படும் போது, அந்த வீட்டை நிர்வகிக்க யாரால் முடியும்?

ஒரு கதிரையைத் தட்டித் துப்பரவாக்கி, அவளை அமரச் சொன்னார். ஒரு தரம் அவளைக் கூர்ந்து நோக்கினார். பின் பார்வையை எங்கோ செலுத்தினார். சிந்தனைகளின் அலைமோதலில் பார்வை நிலை தடுமாறியிருந்தது. வெறுமையான நெற்றியை நிறைக்கும் விபூதிப் பூச்சும், வெண்ணிற சேலையும் அந்த அழகில் ஒரு தெய்வீகத் தன்மையை நிறைத்திருந்தது. எந்தவொரு கவர்ச்சிக்குமே பலியாகாமல் கழுத்தைச் சுற்றி மூடியிருக்கும் சேலைத்தலைப்பு. வழக்கத்திற்கு மாறான சிந்தனையும் பதட்டமும் அவளை ஆச்சரியப்படுத்தின.

'புள்ள! வாழ்க்கையெங்கிறது இறைவனால் அருளப்படுகின்ற 'கிவ்ட்' மாதிரி. சந்தோஷமும் வரும். துக்கமும் வரும். துயரங்கள் தவிர்க்க முடியாதவை. அத்தத் துயரங்களையும் சந்தோஷமாக மாற்றி, இன்பமாக வாழத்தான் ஆண்டவன் அறிவைத் தந்திருக்கிறான். இந்த விஷயத்தைப்பற்றி, ஜெகனோடும் கதைச்சனான். அவனும் சம்மதிச்சிருக்கிறான்..... '—அவளுடைய மனம் குழம்பித் தவித்தது. ஜெகனுடைய விஷயம் அவளுக்கென்னத்திற்கு? என்னத்தைக் கூறப்போகின்றார்?

'நீங்க ஜெகனும் மறுமணம் செய்தாலென்ன?'— இடிவிழுந்ததைப் போலவிருந்தது. அந்த அதிர்ச்சியை அவள் எதிர்பார்க்கவேயில்லை. அப்படியொரு எண்ணத்தை எப்படி அவர் உருவாக்கியிருக்க முடியும்? அவரையே உயிரோடு எரித்திட வேண்டும் போலிருந்தது. நிம்மதியாக வாழலாமென்றால் இங்கேயும் விதி அவளை விரட்டிக் கொண்டேயிருந்தது.

'ஜெகனும் இதற்குச் சம்மதிச்சிருக்கிறான் ...' அதனைத்தான் அவளால் பொறுக்க முடியவில்லை. அப்படியொரு எண்ணத்துடனா இவ்வளவு நாளும் பழகியிருக்கிறான்..... அன்று பார்வதிக்கு சுகமில்லை. வித்தியாவே சமையல் செய்திருந்தாள். அவனுக்கு உணவு பரிமாறினாள்.

'அண்ணி! நீங்களும் இருந்து சாப்பிடுங்கோ ..... அவளும் உடனிருந்து சாப்பிட்டாள். 'அண்ணி! இண்டைக்கு செல்வாய்க்கிழமை தானே... உங்களுடைய சமையல் மணத்தில் தான் கண்டு பிடிச்சன் ...' அந்தச் சிரிப்பில் குழந்தைத்தனமா எதிரொலித்தது?

'இப்பிடியும் ஒரு பிறவியா...? ஒரு பெண்ணின் பரிபக்குவமான தாய்மையன்மை புரிந்து கொள்ளாதவர்கள் தாய்மையான அன்புக்கும் பாசத்துக்கும் வரை விலக்கணம் தெரியாதவர்கள்.

'புள்ள! சாதாரணவொரு பெண்ணாயிருந்தால் இந்த முடிவைக் கூறியிருக்க மாட்டன். ஆனால் நீ சம்பிரதாயங்கள், மதங்களை ஒதுக்கித் தள்ளி முற்போக்கான வாழ்க்கையை அமைத்திருக்கிறாய். என்னுடைய புதுமையான முடிவையும் ஏற்றுக் கொள்வாயென்று நினைக்கிறன் ...'— கந்தப்பு மாஸ்டர் கூறியதை அவள் பொருட்படுத்தவே இல்லை.

புதுமை...எது புதுமை ..... மனம் போன படி வாழ்வது தான் புதுமையா.....? கை வலித்தது. சூட்கேசை மறுகரத்துக்கு மாற்றிக் கொண்டாள். எல்லா உறவுகளையும் உதறி யெறிந்து, தனிமையான வாழ்வை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறாள். வங்கியில் அவளுடன் ஸ்டெனோவாக விருக்கும் சாந்தியின் வீட்டில் குடியிருக்கப் போகின்றாள்.

'மாமி! உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கோ! எங்கயிருந்தாலும் என்னுடைய கடமையைச் செய்வன்...'

—பார்வதியின் கரம் பற்றி, விடைபெற்றபோது, அவளும் அழுதாள். மின்னிக்கொண்டிருந்த விளக்குகள் திடீரென அணைந்தன. மின்பாவனை அதிகரிப்பில் ஏதாவது விபத்து ஏற்பட்டுவிட்டதோ? அந்த இருளினூடே நடந்து கொண்டிருக்கிறாள். அடர்ந்த காட்டினூடே தவஞ் செய்யப்போகும் முனிவரைப் போல..... இனி எந்தவொரு ஒளிக்கிற்றுமே அவள் வாழ்வில் தென்பட வேண்டாம்.

'இறைவா! இனி எந்தவொரு சோதனையுமே என்னைத் தொடரவேண்டாம்'

அப்படி நேர்ந்தாலும் சமாளிக்க முடியும் என்ற ஆத்மபலம் அவளுடைய நடையில் பிரதிபலித்தது. ★

சாகுந்தல ..

(6ஆம் பக்க தொடர்ச்சி)

பவர். 1789 ஆம் ஆண்டு அவர் சாகுந்தலத்தை மொழி பெயர்த்தார்.

இத்தகைய பண்பாட்டுக் கருவூலமாக தெய்வீகநெறி பரப்புவதாக அமைந்த சாகுந்தல காவியத்தைப் படித்துச் சுவைத்த சம்பந்தன் ஐயா எமக்குச் சாகுந்தல காவியத்தை இன்று தருகிறார். சம்பந்தன் தரும் சாகுந்தல காவியம் காளிதாஸரின் மொழி பெயர்ப்பன்று. சாகுந்தலம் கதையால் மிகவும் கவரப்பட்ட அவர் சாகுந்தலத்தை தெய்வக் காரியமாக இன்று தமது கருத்தினை மனதால் வளம்படுத்தியுள்ளார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாளம் பாட்டாவின் கிராமியக் தொண்டு

தமிழருவி த. சண்முகசுந்தரம் தொடர்கிறார்:

பட்டாளம் பாட்டாவிற்குச் சில இரவுகளில் நித்திரை வருவதில்லை. இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் ... கவிதைகளை ஆட்டிக் கொண்டு ... கூட்டி போகும் ... புலவர் ... கறுப்பு. பாட்டாவோ கறுப்பும் இல்லை; வெள்ளையும் இல்லை; பொழுதிறம்.

ஆனால் கண்ணாடியும் ... ஸெனிக்; தாடி வேண்டா. ... பாட்டா ... பாட்டா கிட்டப் போட்டார். "இந்தக் கிராமத்துக்குக் கிராம ... ஒன்று தேவை. அரசாங்கக் ... தேவை. இந்தக் கிராமத்து மகன் தான் ... அதுவுமே ... தான் ... வேண்டும். முருகா ... ..."

இந்த சித்தனைவில் ... ஏழு ... விடியற்காலையாகி ... கண்ணாடி ... "முருகா ..." என்ற கவிதை ... பாட்டாவில் ... ஒலித்தது:

"அக்கா... கூ... பட்... பாய்விட்டு ... எழுந்திரப்பா... கிராமத்துப் பொறுப்பு ... பணியில் ... படப்பா ... எழுந்து ... விரைந்து ... தொடர்கிறது..."

இவ்வளவு ... பாட்டி ... சத்தியது. ... பாட்டா ... ஒலித்தது:

"ஏ... ஏ... பட்டாளம் ... பாட்டா ... ஏ... ஏ... கிழட்டுப் பாட்டா... ... கிராமத்தை ... ... கொண்டு ... ..."

... ஒலி ... ஏ... ... ஏ... ... ...

" ஓம் சக்தி "

"தாயே சரஸ்வதி! உனது பாதங்களை வணங்குகிறேன். எனக்கு வேண்டிய வரங்களைக் கொடுப்பவளே! எனது பாடல்களைத் துவங்குவதற்கு முன்னால் உனது ஆதிகளை பரிபூரணமாக வழங்குமாறு காலில் விழுந்து வணங்கி கேட்டுக் கொள்கிறேன்.

20 மில்க்வைற் நீலசோப் அல்லது 5 பார்சோப் அல்லது 5 சுப்பர் மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அழகிய சரஸ்வதி ஸ்ரிங்கரையும்; "சகல கலாவல்லி மாலை" என்ற நூலையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

சுன்சிவி

19 - 09 - 1987 சனிக்கிழமை

"சிவானந்தத் தேன்"

"நல்லதை நினை; நல்லதைப்பேசு; நல்லதைச் செய், அழியாத ஆனந்த உலகத்தை நீ சீக்கிரம் அடைவாய்.

– சுவாமி சிவானந்தர்

20 மில்க்வைற் நீலசோப் அல்லது
5 பார்சோப் அல்லது
5 சுப்பர் மில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பி "சிவானந்தத் தேன்" என்ற சிறந்த நூலைப்பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் -- யாழ்ப்பாணம்

வல்வையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உண்ணாவிரதத்தை வல்வைப் பிரமுகர்கள் குழுத் தலைவர் திரு. கே. ஈ. திருநாவுக்கரசு ஆரம்பித்து வைத்தார். புலிகளின் 5 அம்சக் கோரிக்கையை முன் வைத்தும்—

திலீபனின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்துமே இந்த ஐவரும் உண்ணாவிரதத்தில் இறங்கி உள்ளனர்.

மிகுதி- - -

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கதைக்க வில்லையாம்.

தம்மைச் சந்தித்த இந்திய இராணுவ அதிகாரிகளிடம் திரு மாத்தயா தெரிவித்ததாவது:-

எமது ஆயுதங்கள் முழுவதும் உங்களிடம் ஒப்படைத்து விட்டோம்

எஞ்சியுள்ள ஆயுதங்கள் என்று நீங்கள் கோருவதற்கு எம்மிடம் எதுவும் இல்லை

நாம் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் போராடியபத்தனையோ போராளிகளை இழந்து இந்த யுத்தக் கைதிகளைப் பிடித்துள்ளோம்.

ஆனாலும் ஸ்ரீலங்கா அரசு தான் கைது செய்த அப்பாவி மக்களைக் கூட தொடர்ந்தும் சிறையில் வைத்துள்ளது.

ஒப்பந்தப் பிரகாரம் விடுவிக்கப்பட வேண்டிய பெரும் எண்ணிக்கையான கைதிகள் இன்னமும் விடுதலை செய்யப் படவில்லை.

இந்த நிலையில் நீங்கள் எம்மிடம் இல்லாத ஆயுதங்களை கேட்பதோ—

யுத்தத்தில் பிடித்த கைதிகளை விடுவிக்குமாறு கோருவதோ விடுதலைப் புலிகளை அவமானப் படுத்தும் செயலாகும்.

இவ்வாறு திரு. மாத்தயா தெரிவித்ததாக அறியவருகிறது.

(உ-10)

அரச அலுவலகங்கள் தொடர்ந்து ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், செப். 19

நேற்றுடன் மூன்றாவது நாளாக அரச செயலகம் உட்பட அனைத்து அரச அலுவலகங்களும் ஸ்தம்பிதமடைந்திருந்தன

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தையடுத்து அரச அலுவலகங்கள் முன் தொடர்ச்சியாக மறியல் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

(உ-10)

திருமலையில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவர்களினால் செலுத்தப்பட்டதாகவும்—

இதனையடுத்தே அசம்பாவிதங்கள் ஏற்பட்டதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

இதேவேளை திருமலையில் பரவலாக பலஇடங்களிலும் தமிழர்கள்மீது தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன.

வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்ட இத்தாக்குதல்களில் சில தமிழர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

என் போராட்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் 650 போராளிகளை இழந்து விட்டோம்.

அடுத்து 651 ஆவது போராளியாக நான போய்க் கொண்டிருக்கிறேன்.

எனது சாவின் மூலம் மக்கள் புரட்சி வெடிக்கட்டும் அதன் மூலம் தமிழீழம் மலரட்டும்.

எனது போராட்டத்தை நிறுத்துமாறு பலர் என்னை வற்புறுத்துகின்றனர்.

இவ்வாறு கோருவது எமது இயக்கத்தை அவமதிப்பதாகும் எனவே எனதுபோராட்டத்தைக் கைவிடும்படி எவரும்வற்புறுந்த வேண்டாம்.

இவ்வாறு அவர் கூறினார். உ-10)

கமல் - வாணி விவாகரத்து

நடிகர் கமலஹாசன் மனைவி வாணியை விவாகரத்துச் செய்து கொண்டார்.

உள்ளும் புறமும்

குறுமுனி

குறுமுனியின் 'உள்ளும்புறமும்' இடமின்மை காரணமாக இன்று வெளி வரவில்லை. நாளைய உதயனில் அது வெளிவரும்

வடமராட்சியில் மக்கள் . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

தலையில் பெட்டியுடன் ஊர்வலம்

இதனைத் தொடர்ந்து வெளியேறிய பொலீஸார் தாங்கள் வசித்த விடுதியில் ஓடி ஒளிந்துக் கொண்டார்கள். இவர்களைத் தேடிச் சென்ற பொதுமக்கள் அவர்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்காமல் அவர்களை வெளியே வரும்படி அழைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து வெளியே வந்த பொலீஸாரை அவர்களின் உடைமைகளை வெளியே எடுத்து வருமாறு பணித்தார்கள்.

உடுப்புப் பெட்டிகளுடன் ஏழு பொலீஸார் வெளியே வந்தார்கள். அவர்களை உச்சி வெயிலில் உடுப்புப் பெட்டியைத் தலையில் சுமந்து கொண்டு வருமாறு பணித்தார்கள்.

அவர்கள் உடுப்புப் பெட்டியுடன் புலோலியிலிருந்து பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். வீதி நெடுக மக்கள் கூடிநின்று வேடிக்கை பார்த்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் திரு. இ. திலீபனின் உண்ணாவிரதத்தையடுத்து வடமராட்சி மக்கள் உணர்ச்சிவசப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

வல்வையில்

நேற்றுக்காலை வல்வை பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக பெரும் எண்ணிக்கையான மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து அங்கிருந்த பொலீஸ்காரர்கள் பின வழியாக வெளியேறிச் சென்றனர்.

எதிர்பாராத விதமாக அவ்வேளையில் அவ்வழியாக தென்னிலங்கைப் பிரமுகர்கள் பலர் வந்தனர்

அவர்களில் பௌத்த பிக்குமார்கள், கிறிஸ்தவ மதகுருமார்கள் ஆகியோரும் அடங்கி இருந்தனர்.

அவர்களிடம் மறியலில் ஈடுபட்டிருந்தவர்கள், அதற்கான காரணத்தை விளக்கிக் கொண்டிருந்தனர்.

அவ்வேளை அவர்களைச் சுற்றிவளைத்துக்கொண்டு வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மறியலில் முன் வரிசையில் இருந்த பெண்களைக் காலால் உதைத்தும், துப்பாக்கியால் இடித்தும் தாக்கினர்.

இதை நேரில் பார்த்த மதகுருமார், இச் சம்பவங்களைக் கண்டித்ததுடன், இது விஷயம் குறித்து யாழ் அரச அதிபருக்கும் கொழும்பில் அரச உயர் மட்டத்துக்கும் தெரிவிப்பதாக அங்கிருந்த மக்களிடம் கூறினர்.

சிறிது நேரத்தில் அவ்விடத்தை விட்டு அந்தப் பிரமுகர்கள் போய் விடவே, மீண்டும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பெண்களில் சிலரை இழுத்துத் தள்ளிய போது, இரு பகுதியினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அவ்விடத்துக்கு விரைந்து வந்த வல்வை ஸ்ரீலங்கா இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி தலையிட்டு நிலைமையைச் சமாளித்து, இராணுவத்தினரின் செய்கை குறித்து வருத்தம் தெரிவித்தார்.

மக்களை மறியலில் ஈடுபடவும், அனுமதித்தார்.

இச்சம்பவத்தை அடுத்து அங்கிருந்தவர்கள் திக்கம் இந்திய இராணுவ முகாமுக்குச் சென்று நடந்த சம்பவம் குறித்தும், புலிகளின் 5 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியும் ஒரு மகஜரை இராணுவப் பொறுப்பதிகாரி லெப்கேர்னல் சத்தியேந்திரசிங்கிடம் கையளித்தனர்.

(அ-ஒ-160-118)

காணவில்லை

செங்குந்தா வீதிக்கும் அரசடி வீதிக்கும் இடையில் 18-09 87 அன்று காலை 8.30 மணி அளவில் நீல கலர் பேர்சுடன், மோதிரமும், பணமும் காணவில்லை. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கதிரவேலு ராஜேஸ்வரி, ராமலிங்கம் ரோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [1699]

WANTED

Sales Representatives

For North And East

Young, Energetic, Ambitious, and willing to travel widely and possessing a valid motor cycle licence.

For promotion of sale of

Johnson Outboard Motors and Fibreglass Boats

Send full details with age, experience, educational qualifications and names of two non-related referees by 30th september 1987.

The Director,
D. V. MARTENSTYN LTD.
P. O. BOX 9 6,
COLOMBO.

ஓராண்டு நினைவு தினம்

மலர்வு:13-3-1957 உதிர்வு:19-9-1986

சாரையடி புலோலி தெற்கு நடேசு ஜேசுதாஸ் அவர்களின் ஓராண்டு நினைவு தினம் இன்று புலோலியில் நடைபெறும்.

ஆத்மா சாந்தியடைய பெற்றோர், சகோதர சகோதரிகளும், உற்றார் உறவினர்களும் இறைவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

தகவல் – வாணெவிக் கிருபாகர சூரியன், புலோலி.

31ஆம் நாள்

★ நினைவஞ்சலி ★

மலர்வு:
28.09.1947

★ ★ ★

உதிர்வு:
29.08.1987

திருமதி

சரஸ்வதி பாலசுந்தரலிங்கம்

எம்மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயரில் தள்ளிச்சென்ற அன்புத் தெய்வமே! உமது பூதவுடல் மறைந்தாலும் உமது புகழ் உடல் மறையவில்லை நீர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உமது நினைவுகள் நாம் இருக்குமட்டும் எம்மைவிட்டுப் பிரியாது. உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மாமனார்.

தம்பிட்டி,
பருத்தித்துறை. (1700)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19 – 09 – 87ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on 19 – 09 – 1987.

சவூதி அரேபியா வேலை வாய்ப்புகள்

1. உடனடியான பயணம் **OPEN VISA**
   1. Drivers - **700 SR**
   2. Labourers - **500 SR**
   (வயது: 25 - 45) FLIGHT 25th

★ லிபியா LIBIYA ★

Petroleum Company Cleaners
(4,000 ரூபா இலங்கைப்பணம், சாப்பாடு, தங்குமிடவசதி)

★ சவூதி அரேபியா

(1)	A/C TECHNICIAN	3	— 600 SR	— 100 SR
(2)	A/C TECHNICIAN	10	— 550 SR	— 100 SR
(3)	ELECTRICIAN (Foremen)	3	— 750 SR	— 100 SR
(4)	TRAILOR DRIVERS	88	— 700 SR	— 100 SR
(5)	PETROL/DIESEL	10	— 700 SR	— 100 SR

(வயது: 25 — 45)

★ சவூதி அரேபியா

Hospital Cleaners

சவூதி அரேபியா Hospital Cleaners — Salary 500 SR
(வயது: 23 — 4) (With Food)

★ பிரயாணம் 10 - 10 - 87

★ சவூதி அரேபியா

(வயது 22 - 44)

(1) Mason	(2) Carpenters	(3) Drivers
(4) Supervisor	(5) Foremen	(6) Forklift Operator
(7) Tally Clerk	(8) Winch Operator	(9) Labourer

★ அபுதாபி

பணிப்பெண்கள் House Maid

(வயது: 18 — 37)

மற்றும் குவைத், பாஹ்ரின், ஓமான், சவூதி, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் பணிப்பெண்கள் உடன் தேவை.

6 படம். 1 முழுக்கலர்ப்படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T. V. TRAVELS TOURIST

Brown Road, Kokuvil

(STAT ON முன்பாக)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வெற்றி ஆதரவில்

உதயன் நடத்தும்

உலகக்கிண்ண கிரிக்கெட் புதிர்

Reliance CUP 1987

பெயர்: _____

முகவரி: _____

_____

_____

இம் முறை உலக கிண்ணத்தை வெல்லப் போகும் நாடு எது? . . . . . .

இம் முறை இரண்டாவது இடம் எந்த நாட்டுக்கு கிடைக்கும்? . . . . . .

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் கூடிய ஓட்டங்களை எந்த நாடு எடுக்கும்?

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் குறைந்த ஓட்டங்களைப் வழங்கப் போகும் நாடு எது?

இந்தப் போட்டியில் இந்திய வீரர் சிறீகாந்த் சதம் பெறுவாரா? . . . . . .

WANTED

AGENTS / DISTRIBUTORS

FOR NORTHERN REGION

FOR
Johnson Outboard Motors
And Spare Parts

ALSO
Fibreglass Fishing Boats

Write with details to :
The Director,
D. V. MARTENSTYN LTD.
P. O. BOX 915,
COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org